
455

வருட சந்தா ரூ. 3

Rgd. No. M. 2194



# மாத்வமித்திரன்

No.
3 APR 1932

# The Madhva Mitran.

Editor, Bhagavatha Ra[illegible]

KUMBAKONAM:

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| | | |
|---|---|---|
| Vol. 4 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 9 |
| | சைத்ர மாஸம் | |
| புஸ்தகம் 4 | பௌர்ணமி (20—4—32) | நெ 9 |

## பொருளடக்கம்.

| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | மத்வமதத்தின் இரகசியங்கள். | 257 |
| 2. | ஆசாரமாலை. | 259 |
| 3. | மணிமஞ்சரி( ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) | 261 |
| 4. | ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். | 265 |
| 5. | ஸ்ரீவியாஸராஜசுவாமிகளின் சரித்திரம். | 267 |
| 6, | ஸ்ரீஜகந்நாததாஸர் சரித்திரம் | 271 |
| 7, | ஸ்ரீதாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 273 |
| | விடைகள். | 281 |
| | ...ப்தித்திரட்டு. | 288 |

ஆசிரியர்

பாகவத ரங்கநாதாசாரியார்.

72
N32.4.7

SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao,*
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை.
R. ரகூத்தமராவ் மானேஜர்

ஏஜண்டுகள் தேவை.
மானேஜர் மாத்வமித்திரன்
ஸ்ரீவியாஸ விலாசம், கும்பகோணம்.

A Book of Easy English Verse
By
V. Ramachandra Rao, B.A., B.L.,
*Certain selections from the Ramayana etc.,*
*A Book for you to enjoy a happy half year.*
Price 4 As. POST FREE.
Apply to:—
*THE MANAGER,*
THE MADWAMITRAN,
Sri Vyasa Vilas,
Kumbakonam.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

3 APR 1932


# மாத்வமித்திரன்.


> श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
> जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
> मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
> ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## மத்வமதத்தின் இரகசியங்கள்.

(முன் தொடர்ச்சி.)

ஸாத்விக ஸாத்விக ஸாத்விகர்கள் மூவகை. ஸாத்விக 3 தாமஸர்கள், ருத்திரன் முதலியோர். ஸாத்விக 3 ராஜஸர்கள் ஸரஸ்வதி. ஸாத்விக 4 பிரம்மா. இவ்வாறு ராஜஸர்கள் மூவகை. ராஜஸதாமஸர்கள், வேதாதிகாரமில்லாதவர்கள். ராஜஸ ராஜஸர்கள், வேதவித்தையுள்ளவர்கள், ராஜஸ ஸாத்விகர்கள் மனுஷ்யோத்தமர்கள். ராஜஸஸாத்விகர்களில் பலவகை. ராஜஸ ஸாத்விக ஸாத்விகர்கள் பிராம்மணர்கள். ராஜஸ ஸாத்விக ராஜஸர்கள், க்ஷத்திரியர்கள். தாமஸ்ஸத்வ ராஜஸர்கள், வைசியர்கள், ராஜஸ ஸாத்விகர்களில் ஸாத்விகர்கள் பரம ஹம்ஸர்கள். சிகை யக்ஞோபவீதமில்லாமல் ஒரே தண்டகாஷ்டத்துடனிருக்கும் ஸந்நியாஸியார் பரமஹம்ஸரெனப்படுவார். பரம ஹம்ஸர்களைவிட அதிகமான ராஜஸர்கள் ஹம்ஸர்கள்; சிகை மட்டிலில்லாமல் யக்ஞோபவீதம் ஒரே தண்டம் இவைகளுள்ளவர்கள் ஹம்ஸர்களென கருதப்பட்டிருக்கிறார்கள். ஹம்ஸர்களைவிட ராஜஸராஜஸர்கள் பஹூதகமெனப்படும் ஸன்யாசிவகையார்கள். அவர்களைவிட அதிக ராஜஸர்கள்குடீசகர்கள். அவர்களைவிட அதிக ராஜஸர்கள் வானப்ரஸ்தாசிரமிகள். அவர்களைவிட அதிக ராஜஸர்கள் பிரம்மசாரிகள். அவர்களைவிட அதிக ராஜஸர்கள் கிருகஸ்

208692



தர்கள், தாமஸர்கள் மூன்றுவகை. தாமஸதாமஸர்கள் முக்ய மான ... பார்கள். தாமஸராஜஸர்கள் அவர்களைச் சேர்ந்தவர்கள். தாமஸஸாத்விகர்கள் மனுஷ்ய அதமர்கள். தைத்யர்களுக்கும் ஸ்வர்க்கமுண்டு. எப்படி எனில் தைத்யர்களில் மூன்றுவகையார் உண்டு. தாமஸதாமஸர்கள், தாமஸ ராஜஸர்கள் தாமஸ ஸாத்விகர்கள். தாமஸதாமஸர்களுக்கு ஸ்வர்க்கஸுகமில்லை. சுத்த மான தமஸ்ஸுதான் கிடைக்கும். தாமஸ ராஜஸர்களுக்கும் ஸ்வர்க்கமில்லை. நரகமனுபவித்தபின் தமஸ்ஸுதான் கிடைக் கும். தாமஸஸாத்விகர்களுக்கு மட்டில் சிறிது ஸ்வர்க்கஸுக முண்டு. அதை அனுபவித்தபின் தமஸ்ஸுதான். இவர்கள் யக்ஞகிரியைகளைச் செய்யும்பொழுது விஷ்ணுத்வேஷிகளான தால் தமஸ்ஸை அடைகின்றனர்.

தாரதம்யம்:— விஷ்ணு ஸர்வோத்தமர். அவருக்கு ஸமான ரில்லை. அவரைவிட அனந்தமடங்கு குறைந்தவள் மகாலட்சுமி அவியக்த தத்வத்திற்கு அபிமானி. அவளுக்கு அநேக அவதா ரங்களுண்டு. வாஸுதேவ மூர்த்தியின் பத்னி மாயா; ஸங்கர் ஷணமூர்த்தியின் பத்னி ஜயா; ப்ரத்யும்னரின் பத்னி கிருதி, அனிருத்தனின் பத்னி சாந்தி; விஷ்ணுவின் பத்னி ஸ்ரீ. பிரம்மா வின் ரூபமுள்ள ஹரியின் பத்னி பூ. சிவனின் ரூபமுள்ள ஹரி யின் பத்னி துர்க்கை. ரிஷபமூர்த்தியின் பத்னி ஜயந்தா. யக்ஞ மூர்த்தியின் பத்னி தக்ஷிணை, வேதவியாஸரின் பத்னி அம்பாணி, மத்ஸ்யமூர்த்தியின் பத்னி வேதா, கூர்மனின் பத்னி வேதவதி. வராஹனின் பத்னி தாணி, நரஸிம்ஹனின் பத்னி லக்ஷ்மி, வாமனின் பத்னி ஸுகாலயா. பரசுராமரின் பத்னி ஹரணி ராமனுடைய பத்னி ஸீதா கிருஷ்ணனுடைய பத்னி ருக்மணி, ஸத்யபாமா இவர்கள். புத்தமூர்த்தியின் பத்னி ரேவதி, கல்கி யின் பத்னி ப்ரபா, கேசவனுடைய பத்னி ஸ்ரீ, நாராயணனின் பத்னி லக்ஷ்மி, மாதவனுடையவள் கமலா, கோவிந்தனுடையவள் பத்மா, விஷ்ணுவினுடையவள் பத்மினி. மதுஸூதனனுடை யவள் கமலாலயா, த்ரிவிக்ரமனுடையவள் ரமா, வாமனுடையவள் விருஷாகபி, ஸ்ரீதரனுடையவள் தன்யா, ஹிருஷீகேசனுடையவள் விருத்தா, பத்மநாபனுடையவள் யக்ஞா. (தொடரும்.)

# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

## தந்த தாவனம்.

இரண்டு கால்களையும் கைகளையும் முகத்தையும் சுத்த ஜலத்தால் கழுவிக்கொண்டு முழங்கால்களை சேர்த்து குக்குடாஸனத்தில் உட் கார்ந்துகொண்டு இடதுகையை முழங்கால்களின் நடுவில் வைத்து வலது கையால் தந்ததாவனம் செய்துகொள்ளவேண்டும். பல் குச்சியால்தான், தந்ததாவனம் விதிக்கப்பட்டிருக்கிறது. ப்ரதமை, பர்வகாலம், ஷஷ்டி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, த்வாதசி, சதுர்தசி, ஸங்க்ரமண காலம் ஜன்ம நக்ஷத்திரம், உபவாஸ நாட்கள், வைதிருதியோகம், சாயங்காலம் மங்களவாரம், குருவாரம், சுக்ரவாரம், பானுவாரம் இந்த நாட்களிலும் ஆறு, தேவாலயம், மாட்டுக்கொட்டில், ஜலத்தின் மத்யம், சுத்தஸ்தலம் இந்த இடங்களிலும் தெற்குமுகமாகவும், நின்றுக்கொண்டும், படுத்துக் கொண்டும், மூலையைப் பார்த்துக்கொண்டும், நடமாடிக்கொண்டும், மேற்கு முகமாய் இருந்துகொண்டும், பல் குச்சியால் தந்ததாவனம் செய்துகொள்ளலாகாது. அமாவாசை, ஏகாதசி, இந்த நாட்களைத்தவிர மற்ற நாட்களிலும் மாவிலையால் தேய்த்துக்கொள்ளலாம். மேற் கண்ட இரண்டு நாட்களிலும் நிஷித்த தினங்களிலும் பற்குச்சி கிடைக் காமலிருக்கும் சமயத்திலும் ஜலத்தை பன்னிரண்டு தடவை கொப்ப ளித்தால் தந்தசுத்தியாகும். பற்குச்சி பிராம்மணனுக்கு பன்னிரண்டு அங்குலமும், க்ஷத்திரியர்களுக்கு ஒன்பது அங்குலமும், வைசியர்களுக்கு ஆறு அங்குலமும், சூத்திரர்களுக்கு நான்கு அங்குலமும், ஸ்திரீகளுக்கு நான்கு அங்குலமும், விதிக்கப்பட்டிருக்கிறது. விதவைகள், பிரம்ம சாரிகள், கன்னிகள் இவர்கள் பற்குச்சியைக்கொண்டு பற்களை துலக்க லாகாதென்றார் பரத்வாஜர். பற்குச்சியை அடியிற்கண்ட மந்திரத் தால் அபிமந்திரணம் செய்துதான் அதைக்கொண்டு தந்ததாவனம் செய்துகொள்ளவேண்டும். "ஆயுர் பலமிதி மந்திரஸ்ய ப்ரஜாபதிரிஷி; அனுஷ்டுப் சந்த: பிரஹஸ்பதிர் தேவதா தந்ததாவனே வினியோக:: ஆயுர்பலம் யசோ வர்ச்ச: ப்ரஜா: பசுவஸூநிச / பிரம்மப்ரக்ஞாம் சமே தாம் சத்வம்நோதேஹி வனஸ்பதே" என்பது மந்திரம். அபிமந்திரண மில்லாமல் பிராம்மணன் பற்குச்சியால் தந்ததாவனம் செய்துகொள்ள லாகாது. பற்குச்சியை அலம்பிவிட்டு சுத்த பிரதேசத்தில் போடலா காது. பாலுள்ள மரத்தின் ஒழுங்கான குச்சியை உபயோகப்படுத்த வேண்டும். குச்சியை கிளையிலிருந்து ஒடிக்கவேண்டுமே ஒழிய பிடுங்க

லாகாது. ஆலமரத்து குச்சியினால் தந்ததாவனம் செய்துகொண்டால் அர்த்தஸம்பத்தியும் காரிய சித்தியுமுண்டாகும். இலந்தை மரத்துக் குச்சியால் மதுரமான ஸ்வரமும், புளியமரத்துக்குச்சியால் காந்தியும், பில்வமரத்துக் குச்சியால் பணமும், மாமரத்துக் குச்சியால் ஆரோக்யமும், அத்திமரத்துக் குச்சியால் வாக்குவண்மையும், நாயரிஞ்சியால் தைரியம் பிரஜாசக்தி புஷ்டி ஸௌபாக்யம் இவைகளும் எருக்கங்குச்சியால் உபாதி நிவிருத்தியும் இந்த எல்லா குச்சிகளால் துற்ஸ்வப்னம் விழாதிருத்தலும் அகில் குச்சியால் ஸௌபாக்யமும், இலுப்பைக்குச்சியால் திடமான ஞாபகசக்தியும், கடப்பமரத்துக்குச்சியால் எல்லாவகை லட்சுமி ஆயுஸ்ஸு ஆரோக்யம் இவைகளும், மாதுளை குச்சியால் மனோவியாதி நிவிருத்தியும் உண்டாகும். அரசை, பொரசை இந்த மரங்களின் குச்சியை உபயோகிக்கலாகாது. பருத்தி, தர்பம், நாணல், கரி, மணல், வஸ்திரம் சாம்பல், ஓடு, செங்கல் இவைகளாலும் நகங்கள் விரல்கள் இவைகளாலும் தேய்த்துக் கொள்ளலாகாது. வாயைக் கொப்பளிக்கும்பொழுது ஆள்காட்டி விரலால் தந்ததாவனம் செய்துகொள்ளும் மூடன் நகரத்தில் விழுகிறானென்று வியாஸஸ்மிருதி அறிவிக்கிறது.

ஆசமனம்.

பவித்ரம் தரித்துக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். விதி விகிதமான கர்மாக்களில் பவித்ரமில்லாமல் ஆசமனம் செய்தால் அந்த கர்மா வியர்த்தமென்று ஆக்னேய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பவித்ரம் தரித்து ஆசமனம் செய்தால் அது உச்சிஷ்டமாகாது. பவித்ரம் தரித்து போஜனம் செய்தால் அந்த பவித்ரம் பின்பு உபயோகமில்லை. பத்து அங்குல நீளங்கொண்டதாய் நகங்களால் கிள்ளப்படாததாய் நுணியுள்ளதாய் நடுவிலிருந்த நரம்பு கிழிக்கப்பட்டதான இரண்டு தர்பங்களால் செய்யப்பட்டது பவித்ரமெனப்படும். எண்பது குண்டுமணி இடையுள்ள நல்ல நிறமுள்ள தங்கத்தால் செய்த பவித்ரம் எல்லா காரியங்களுக்கும் சிரேஷ்டமானது. இதர தர்பபவித்ரங்களுக்கு இந்த ஸுவர்ணமயமான பவித்ரத்தின் பதினறில் ஒருபங்கு மேன்மைதான் உண்டு. காய்ச்சப்பட்டதும், துர்கந்தமுள்ளதும், நுரை முதலியவைகளுள்ளதும், ஏலக்காய் முதலிய வாசனை சாமான்களுடனுடையதும் உவர்ப்பானதும், சௌசம் செய்துகொண்டு மீர்ந்ததும், மூடிக்கிடந்ததும், நாள்பட்டதும், இதரர்கள் ஆசமனம் செய்ததும், புழுக்களுள்ளதும் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து மீர்ந்ததும், சமையலுக்கு உபயோகப்படுத்தி மீர்ந்ததும், ஸ்நானம் செய்து மீர்ந்ததும், ஆகிய இந்த ஜலத்தை ஆசமனம் செய்யலாகாது. (தொடரும்.)



## ஸ்ரீநாராயண பண்டிதாசாரியாளியற்றிய

# மணிமஞ்சரி.

(முன் தொடர்ச்சி.)

### நான்காவது ஸர்க்கம்.

1. யமுனையின் மடுவில் காளியனென்ற ஸர்ப்பம் கருடபகவானுக்கு பயந்து ஒளிந்திருந்து அந்த யமுனையின் ஜலத்தை விஷமயமாகச் செய்திருந்தான். அந்த ஜலத்தைக் குடித்து கோபாலகர்கள் பசுக்களெல்லாம் மாண்டுபோக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அதில் குதித்து அவனுடைய படத்தின்மீது நர்த்தனமாடி அவனை அம்மடுவினின்றும் வெளியே துரத்தி எல்லோரையும் பிழைக்கவைத்து யமுனையை சுத்தமாக்கினர். கடுமையான காட்டுத்தீயால் ஒரு அசுரன் வந்துசேர அத்தீயை குடித்து ஸ்ரீகிருஷ்ணர் அந்த அஸுரனை ஸம்ஹரித்தார். மற்றொரு அசுரன் தன்ஸகாக்களுடன் விஷவிருக்ஷமாய் கோகுலத்தில் வளர்ந்திருந்து அதன் காற்றால் கோகுலத்திலுள்ளவர்களைக் கொன்றுவர பகவான் அந்த விஷவிருக்ஷத்தை வேறுடன் பிடுங்கித்தள்ளி அவனையும் அவன் சகாக்களையும் கொன்றார். மற்றும் பல அஸுரர்கள் பசுக்களாய் வந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய பசு மந்தைகளுடன் கலந்து அவைகளைக்கொல்லவும் பகவான் அந்த அஸுரர்களை ஸம்ஹரித்தார். 2. கும்பனென்ற கோபாலகனுடைய பெண்ணை விவாகம் செய்துகொள்வதற்கு அஸுரர்களான எழு காளைகளை அடக்கிக் கட்டவேண்டுமென்று பந்தயம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அந்த ஏழு காளைகளின் உருவத்துடனிருந்த அஸுரர்களை ஸம்ஹரித்து நீலாதேவி என்ற அந்த கோபகன்னிகையை விவாஹம் செய்துகொண்டார். அவள் பூர்வ ஜன்மத்தில் தவம் செய்து வரம்பெற்றிருந்ததால் ஸ்ரீகிருஷ்ணன் உபநயனம் செய்துகொள்வதற்கு முன்பே அவளை விவாகம் செய்துகொண்டார். கழுதை உருவாயிருந்த தேனுகாஸுரனை அண்ணாவான பலராமரால் கொல்லச்செய்து ஸ்வயம் ஸ்ரீகிருஷ்ணர் அவனைச்சேர்ந்த அநேக கழுதைகளாக இருந்த அஸுரர்களை ஸம்ஹரித்தார்.

3. கோபாலகனுடைய ரூபத்துடன் விளையாட்டில் கொல்லவந்த பிரலம்பனென்ற அஸுரனை பலராமர் கொன்றார். பிறகு மற்றொரு முறை பிரம்மாண்டமான காட்டுத்தீவந்து சூழவும் அதை மீண்டும் பானம் செய்து பிருந்தாவனத்தை ஸம்ரக்ஷித்தார். நாராயணனை ஸ்ரீகிருஷ்ணர் பக்தர்களிடம் காட்டும் கருணைக்கு கடல் போன்றவர். ஆதலால் பக்தர்களை ஸம்ரக்ஷிக்க இவ்வாறெல்லாம் அஸுர சம்ஹாரம் செய்துவந்தார். 4. பகவான் கோபாலகர்களுடன் பிராம்மணர்கள் யாகம் செய்திருந்த யக்ஞவாடத்திற்கு சமீபம்போய் தங்களுக்கு போஜனம் வேண்டுமென்று சொல்லியனுப்ப பிராம்மணர்கள் அன்னத்தைக் கொடுக்க மறுக்கவும் அவர்களுடைய பத்னிமார்கள் பகவானிடமுள்ளபக்தியால் சுபம் எல்லா பதார்த்தங்களுடன் போஜனத்தைக்கொண்டுவந்து பகவானிடம் வந்து ஸமர்ப்பிக்க அதை தன் சகாக்களுடன் பகவான் போஜனம் செய்து அந்த ஸ்திரீகளுக்கு அனுக்ரஹம் செய்தார். 5. கோபாலகர்கள் வழக்கப்படி இந்திரனைக்குறித்து செய்துவரும் யக்ஞத்தை பகவான் அந்த இந்திரனுக்குத் தான் ஸர்வோத்தமன் என்பதைக் கற்பிப்பதற்காக நிறுத்தச்செய்து பர்வதத்தின் உத்தேசமாக அந்த யக்ஞத்தைச் செய்யச்செய்ததால் இந்திரன் கோபங்கொண்டு பிரளய காலத்தில் விருஷ்டிசெய்யும் மேகங்களை பிரேரிபித்து பிரம்மாண்டமான மழைபெய்யச்செய்து பிருந்தாவனத்திலுள்ள கோக்க கோபாலகர்கள் முதலியவர்களைக் கொல்லப்பார்க்கவும் எல்லோரும் அந்த விருஷ்டியைத்தாளாமல் தத்தளிக்கவும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அங்கிருந்த கோவர்த்தன பர்வதத்தை இடதுகையால் பிடுங்கி எடுத்து ஏழு நாள் தரித்து அதன்கீழ் எல்லோரையும் தங்கியிருக்கச்செய்து தன்னைச்சேர்ந்தவர்களெல்லோரையும் ஸம்ரக்ஷித்தார். 6. பகவான் ஸ்ரீகிருஷ்ணரை பர்த்தாவாய் அடைய பார்வதியைக் குறித்து தவம் செய்து வரனைப்பெற்றிருந்த கோபிகளை விவாகம் செய்துகொண்டு அவர்களுடனும், கோபாலர்களை விவாகம் செய்துகொண்ட இதர கோபிகளுடனும், பகவான் சரத்கால சந்திரனின் சந்திரிகையால் மனோஹரமான இரவுகளில் வெகுநேரம் க்ரீடித்



திருந்து அவர்களை சந்தோஷப்படுத்தினார். 7. பரம ஸுந்தரமான ரூபம் வாய்ந்த அந்த கோபிகைகளுடன் பகவான் ராஸக்ரீடை செய்து அவர்களின் நடுவில் நின்று வேணுகானம் செய்துகொண்டு அவர்களுடன் நர்த்தனம் செய்துவந்தார். 8. அச்சமயம் சங்கசூடனென்ற ஓர் அஸுரன் கோபிகைகளை விறட்டிக்கொண்டு வரவும் அவனை பகவான் ஸம்ஹரித்தார். காளை உருவத்துடன் பசுக்களை விட்றடியடித்துக்கொண்டுவந்த அரிஷ்டாஸுரனையும், குதிரை உருவத்துடன் வந்த கேசி என்றவனையும், கோபாலகர்களை எல்லாம் குகையில் அடைத்துவைத்த வியோமாஸுரனென்ற மயாஸுரனின் குமாரனையும் கொன்று பிருந்தாவனத்திலுள்ளவர்களுக்கு ஏற்பட்ட ஆபத்தைப்போக்கி அவர்களை ஸம்ரக்ஷித்தார். 9. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மதுரையில் நடக்கவிருந்த தனுர் உற்சவத்தை பார்ப்பதற்காகவென ஸ்ரீகிருஷ்ணரை அழைத்துவர அவருடைய மாமனான கம்ஸன் தன் மந்திரியான அக்ரூரனை பிருந்தாவனத்திற்கு அனுப்ப, பகவானிடம் பக்திகொண்ட அக்ரூரன் கிருஷ்ணனுடைய காலடி பதிந்திருந்த புழுதியில் பிறண்டெழுந்து கிருஷ்ணனை நேரில் பார்த்து பரமானந்தமடைய, அந்த பக்தனை பகவான் தன் வீட்டிற்குள் அழைத்துவந்து ஷோடசோபசாரங்களையும் செய்து கம்ஸனுடைய அபிப்பிராயப்படி பலராமரை அழைத்துக்கொண்டு அக்ரூரனுடன் மதுராபட்டணம் வந்து சேர்ந்தார். 10. ராஜமார்க்கத்தில் யானையின்மீதேறி வந்துகொண்டிருந்த அஸுரனான கம்ஸனின் வண்ணானை ஸம்ஹரித்தார். பிறகு ஆயுதசாலையில் புகுந்து கம்ஸனுக்கு பரமசிவனால் கொடுக்கப்பட்டிருந்த தனுஸ்ஸை இரண்டாக முறித்தார். அதற்காக தம்முடன் யுத்தத்திற்கு வந்த கம்ஸனுடைய சைனியத்தை அந்த தனுஸ்ஸின் இரண்டு துண்டுகளைக்கொண்டே பலராமருடனிருந்து ஸம்ஹரித்தார். மறுநாள் ரங்கஸ்தலத்தை பிரவேசிக்க ஸ்ரீகிருஷ்ணர் பலராமருடன் வந்தபோது ரங்கஸ்தலத்தின் வாசலில் நிறுத்தவைக்கப்பட்டிருந்த குவலயாபீடமென்ற யானை, அதன்மீது உட்கார்ந்திருந்த அதன் மாவுத்தன் மகாமாத்ரனால் தூண்டப்பட்டு யுத்தத்திற்கு வந்துசேர, பகவான்

யானையையும் மாவுத்தனையும் கொன்றார். ரங்கஸ்தலத்தினுள்ளே மகா மல்லர்களான சாணூரன் முஷ்டிகன் இவர்கள் ஸ்ரீகிருஷ்ணன் பலராமன் இவர்களுடன் முறையே மல்யுத்தம் செய்யவும், ஸ்ரீகிருஷ்ணன் சாணூரனையும், பலராமன் முஷ்டிகனையும் கொன்று ரங்கஸ்தலத்தில் ஸ்ரீகிருஷ்ணர் ஒருவராயினும் பல வகையாய் பிரகாசித்தார். மல்லர்களுக்கு அவர்களை இடிக்கவந்த இடியே என்றும், சாமானிய புருஷர்களுக்கு புருஷோத்தமனென்றும், ஸ்திரீஜனங்களுக்கு சாக்ஷாத் சரீரத்துடனேவந்த மன்மதனென்றும், கோபாலர்களுக்கு அவர்களின் உறமுறையானென்றும், அயோக்யர்களான அரசர்களுக்கு அவர்களின் சிக்ஷகனென்றும், தாய்தந்தையர்களான தேவகிவசுதேவன் இவர்களுக்கு அவர்களின் பச்சைக்குழந்தை என்றும், போஜபதியான கம்ஸனுக்கு விதியால் ஏற்படுத்தப்பட்ட அவனுடைய மிருத்யுதானென்றும், பிரம்மாதி யோகிகளுக்கு பரபிரம்மமே யென்றும், யாதவர்களுக்கு அவர்களின்யஜமானனென்றும் இவ்வாறு விளங்கினார். 11. மிகவும் உயர்ந்த மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த அவருடைய மாமனான கம்ஸனை பகவான் அவனுடைய தலைமயிரை பிடித்து இழுத்து கீழேதள்ளி இரண்டு கால்களால் தேய்த்துக்கொன்றார். 12. அவனுடைய இருபது அக்ஷௌஹிணி சைனியங்களையும் மீதியில்லாமல்கொன்று சகல ஜனங்களையும் சந்தோஷப்படுத்தினார். விலங்கிடப்பட்டிருந்த அவருடைய தாய்தந்தையர்களான தேவகி வஸுதேவன் இவர்களை விடுவித்து இவர்களுக்கு நமஸ்காரம் செய்தார். 13. கம்ஸன் இறந்துபோனதால் அவனுடைய பாரியைகளான அஸ்தி ப்ராப்தி என்றிருவர்கள் விதவைகளாய்ப்போனதைக் கண்டுவிட்டு அவர்களுடைய தந்தையான மகததேசாதிபதி ஜராசந்தன் சோகத்தால் மிக்ககோபங்கொண்டு இருபத்திமூன்று அக்ஷௌஹிணி சைனியங்களுடன் ஸ்ரீகிருஷ்ணரோடு யுத்தத்திற்கு வந்து சேர்ந்தான். ஸ்ரீகிருஷ்ணர் பலராமருடன் சேர்ந்து அவ்வளவு சைனியங்களையும் கொன்று, ஜராஜந்தனை தோற்கடித்து துறத்திவிட்டார். இவ்வாறு ஜராஸந்தன் பதினெட்டு தடவை ஒவ்வொருதடவையும் இருபத்திமூன்று அக்ஷௌஹிணி சைனியங்களுடன் யுத்தத்திற்கு வந்து எல்லா சைனியங்களும் கொல்லப்பட்டுப்போய் இவன்தோற்கடிக்கப்பட்டான். ஆனால் அவனைமட்டில் கொல்லவில்லை.

(தொடரும்.)



# ஸ்ரீ மத்வமதகிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி).

---

## 7. ஸ்ரீபத்மநாபதீர்த்தர்:—

69. ஸத்தர்கதீபாவளி (அணுபாஷ்யடீகை)
70. ஸந்யாயரத்னாவளி (அனுவ்யாக்யான டீகை)
71. கீதாபாஷ்ய டீகை
72. கீதாதாத்பரிய டீகை
73. யமகபாரதவ்யாக்யானம்
74. பிரமாணலக்ஷண டீகை
75. கதாலக்ஷண டீகை
76. உபாதிகண்டண டீகை.
77. மாயாவாதகண்டன டீகை
78. மித்யாத்வானுமானகண்டன டீகை
79. தத்வஸங்க்யான டீகை
80. தத்வவிவேக டீகை
81. தத்வோத்யோத டீகை
82. கர்மநிர்ணய டீகை
83. நியாயரத்னமாலா (தத்வநிர்ணய டீகை

## 8. ஸ்ரீநரஹரிதீர்த்தர்:—

84. கர்மநிர்ணய டீகை
85. தத்வநிர்ணய டீகை
86. கீதாபாஷ்ய டீகை
87. யமகபாரத வ்யாக்யானம்

## 9. ஸ்ரீஜயதீர்த்தர்:—

88. நியாயகல்பலதா (பிரமாண லக்ஷண டீகை)
89. ப்ரமேயதீபிகா (கீதாபாஷ்ய டீகை)
90. நியாயதீபிகா (கீதாதாத்பரிய டீகை)
91. தத்வப்ரகாசிகா (சூத்ரபாஷ்ய டீகை)
92. நியாயஸுதா (அனுவ்யாக்யான டீகை)
93. நியாயவிவரண டீகை
94. ஸம்பந்ததீபிகா (ரிக்பாஷ்ய டீகை)
95. ஷட்பிரச்ன டீகை
96. ஈசாவாஸ்ய டீகை
97. தத்வவிவேக டீகை
98. தத்வஸங்க்யான டீகை
99. உபாதிகண்டன டீகை
100. மாயாவாதகண்டன டீகை
101. மித்யாத்வானுமான கண்டன டீகை
102. தத்வநிர்ணய டீகை
103. கதாலக்ஷண டீகை
104. தத்வோத்யோத டீகை
105. கர்மநிர்ணய டீகை
106. பிரமாணபத்ததி
107. பத்யமாலா
108. வாதாவளி
109. சதாபராதஸ்தோத்திரம்

10. ஸ்ரீவியாஸதீர்த்தர்:- (ஜயதீர்த்தரின் சீடர்) உ. மடம்

110. தலவகார டீகை
111. அதர்வண டீகை
112. தைத்திரீய டீகை
113. பிருஹதாரண்யக டீகை
114. காடக டீகை
115. மாண்டூக டீகை
116. ஐதரேய டீகை
117. சாந்தோக்ய டீகை
118. பாரததாத்பர்ய நிர்ணய டீகை
119. ஜயதீர்த்தவிஜயம்

11. ஸ்ரீவியாஜராஜர்:- (சந்திரிகாசாரியார்) வியாஸராஜமடம்

120. தாத்பரியசந்திரிகை (தத்வப்ரகாசிகைவ்யாக்யானம்)
121. நியாயாமிருதம்
122. தர்க்கதாண்டவம்
123. மாயாவாதகண்டனடிப்பணி (மந்தாரமஞ்சரி)
124. மித்யாத்வானுமான கண்டனடிப்பணி (மந்தாரமஞ்சரி)
125. உபாதிகண்டனடிப்பணி (மந்தார மஞ்சரி)
126. தத்வவிவேகடிப்பணி ( ” )
127. தத்வோத்யோதடிப்பணி (மந்தாரமஞ்ஜரி)
128. பேதோஜ்ஜீவனம்

12. ஸ்ரீலக்ஷ்மீநாராயணதீர்த்தர்:— (வியாராஜமடம்)

129. நியாயாமிருதவ்யாக்யானம்

13. ஸ்ரீபிரம்மண்யதீர்த்தர்:— (குந்தாபுரமடம்)

130. தத்வப்ரகாசிகாடிப்பணி

14. கம்பாலு. ஸ்ரீராமச்சந்திரதீர்த்தர்:— (வியா. மடம்)

131. ஸூதாடிப்பணி
132. ரிக்பாஷியடிப்பணி

15. ஸ்ரீஜகந்நாததீர்த்தர்:— (வியாஸ். மடம்)

133. பாஷியதீபிகை
134. ஸூத்ரதீபிகை

16. ஸ்ரீரகூத்தமதீர்த்தர்:— (உத்தாராதிமடம்)

135. தத்வப்ரகாசிகா பாவபோதம்
136. நியாயவிவரண பாவபோதம்
137. பிருஹதாரண்யகபாவபோதம்
138. கீதாபாஷிய பாவபோதம்
139. தத்வநிர்ணயடிப்பணி

17. ஸ்ரீரகூத்தமரின் சீடர் ரோட்டி வெங்கடபட்டர் (உத்தராதி மடம்)

140. கதாலக்ஷணடிப்பணி
141. தத்வஸங்க்யானடிப்பணி
142. கர்மநிர்ணயடிப்பணி
143. தினத்ரயநிர்ணயம்

18. ஸ்ரீரகூத்தமரின் சீடர் ஆத்ய ராமாசாரியார் (உத்தாராதிமடம்)

144. ஸதாசாரஸ்மிருதி வியாக்யானம்
145. தரங்கிணி (நியாயாமிருதவ்யாக்யானம்)

19. ஆத்ய ராமாசாரியாரின் சீடர் வனமாலாமிச்ராசாரியார்:— (உத்தாராதிமடம்)

146. வனமாலாமிச்ரீயம் (பிரம்மாநந்தீய கண்டனம். இதுதான் அத்வைத மதத்தின்மீது கடைசியாய் மேலிட்டு நிற்கும் மாத்வர்களின் வாதகிரந்தம்.)

(தொடரும்.)



# ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

---

ஸ்ரீவியாஸராஜருக்கு நரசசக்ரவர்த்தி அளித்திருந்த இந்த வித்யா விஷயமான பெரும் கௌரவத்தைக்கண்டு அநேக பண்டிதர்கள் சகிக்கவில்லை. இந்தபதவியைத் தாலாகாதென்று பலவகையாய் சக்ரவர்த்தியிடம் தங்கள் மனத்தாங்கலை அறிவித்தனர். சக்ரவர்த்தி இதற்கெல்லாம் சற்றேனும் செவிசாற்ருமல் மிகுந்த பக்தியுடன் ஆதரித்துவந்தான். இதைப் பற்றி பண்டிதர்களில் பெரும் கிளர்ச்சி உண்டாயிற்று. அந்தந்த தேசங்களிலுள்ள மகாபண்டிதர்களெல்லாம் ஒன்றுசேர்ந்தனர். களிங்கதேசத்து பிரஸித்தபண்டிதனுகிய பஸவபட்டர் என்பவரை முன்னிட்டுக்கொண்டு பண்டிதர்களின் பெருங்கூட்டம் விஜயநகரத்திற்கு வந்துசேர்ந்தது. அவரவர்கள் தம்தம் பிருதாவளி பத்திரங்களை அரண்மனை வாசல் வளைவு ஸ்தம்பங்களில் கட்டிவிட்டு சக்ரவர்த்தியின் சபாமண்டபத்தில் வாதத்திற்காகவந்து உட்கார்ந்தனர். அங்கம், வங்கம், கலிங்கம், மாளவம், கேரளம், சோழநாடு முதலிய தேசங்களிலிருந்து மிகுந்த படாடோபத்துடன் பண்டிதர்கள் உட்கார்ந்ததைக்கண்டு சக்ரவர்த்தி வியாஸராஜரின் பாண்டித்யத்தை அறிந்தும் பயந்துவிட்டான். மந்திரிமார்கள் திகிலடைந்தனர். சக்ரவர்த்தி மிகுந்த பரபரப்புடன் வியாஸராஜரை அழைத்துவரும்படி மந்திரியை அனுப்ப மந்திரிமார்கள் வெளியில் கட்டியிருந்த அந்த பிருதாவளி பத்திரிகைகளை பிடுங்கி எடுத்துக்கொண்டு பல்லக்குடன் வியாஸராஜரிடம்வந்து அவைகளைக்காட்டி பண்டிதர்களின் பெருங்கூட்டம் வாதத்திற்கு வந்திருப்பதாயும் சக்ரவர்த்தி அழைத்துவரும்படி அவர்களை ஆக்ஞாபித்திருப்பதாயும் விக்ஞாபித்துக்கொண்டனர். ஸ்ரீவியாஸராஜர் சந்தோஷத்துடன் உடனே வந்துசேர்ந்தார். சக்ரவர்த்தியும் வியாஸராஜரைக்கண்டவுடன் தடபுடலாய் எழுந்து உயர்ந்த இடத்தில் உத்தமமான முத்ராஸனத்தைத்தந்து மிகுந்த மரியாதை செய்தார். வியாஸராஜர் அங்கு வந்திருந்த பண்டிதர்களை வெகு அலக்ஷியமாய் பார்த்துவிட்டு வாதம் துவக்குவதற்குமுன் ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய பந்தயம் முதலிய ஸமயபந்தங்களை செய்துகொண்டார். பஸவபட்டர் வாதத்தைத் துவக்கினுர். வந்திருந்தவர்கள் மகா பண்டிதர்களானதால் ஒருவர் மாறி மற்ெறுருவராய் புங்கானுபுங்கமாய் யுக்திகளைப்பொழிந்தனர். வியாஸராஜர் ஒருவரே நின்று அடிக்கடி எல்லோரும் பிரமிக்கும்படியாய் பதிற்கூறி அவர்களின் யுக்திகளை

யெல்லாம் கண்டித்துத் தம் மதத்தை ஸ்தாபித்தார். ஸ்ரீவியாஸராஜருடைய கம்பீரமான தொனி எங்கும் கேட்டது. சபை முழுமையும் வியாபித்து எதிரொலி கிளம்பியது. அதைக்கேட்டு எதிர்கக்ஷியினர்கள் மிகுந்த திகிலடைந்தனர். இடிமுழக்கமோ கடலோசையோ சங்கத்வானமோ என்றுதான் ஜனங்கள் எண்ணினர். இந்த வாதம் முப்பது நாள்வரை ஏகப்ரகாரமாய் நடந்து முப்பத்திஒன்றாவதுநாள் பஸவபட்டர் முகம் வெளுத்துப்போய் மேற்கக்ஷி கூறமுடியாமல் தலையைத் தொங்கப்போட்டு உட்கார்ந்துவிட்டார். கூடவந்திருந்த பண்டிதர்களும் லஜ்ஜையால் வெட்கிப்போய் வெகுகாலம் ஜ்வரமடித்தவர்கள்போல் வாடிவதங்கிப்போயினர். சபையிலிருந்து ஏதாவது சாக்கு போக்கு சொல்லி எழுந்து ஓட இச்சைப்பட்டார்களாயினும் வாதத்திற்கு முன் சக்ரவர்த்தியின் எதிரில் செய்துகொண்ட சமயபந்தம் அவ்வாறு செய்ய இடம் தரவில்லை. பஸவபட்டர் பூஜித்திருந்த சிவலிங்கத்தை ஜயத்தின் அறிகுறியாக வியாஸராஜர் கைப்பற்றினார். இன்றைக்கும் அது வியாஸராஜமடத்தில் சிவராத்திரியன்று பூஜிக்கப்படுகிறது. சபையில் கூடியிருந்த ஜனங்கள் பலமாய் கரகோஷம்செய்து ஸ்ரீவியாஸராஜரைஜயா விஜயீபவ என்று துதித்து ஆரவாரம் செய்தனர், நரஸ சக்ரவர்த்தி ஆனந்தஸமுத்திரத்தில் மூழ்கி கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர்வடித்துக்கொண்டு புலகாங்கிதகாத்ரனாய் வாய்குழற கால்தடுமாற ஸ்ரீவியாஸராஜரை பன்முறை சாஷ்டாங்க நமஸ்காரங்களைச்செய்து இரு பாதபத்மங்களிலும் தன் சிரஸ்ஸை சிறிதுநேரம் வைத்திருந்து கண்களில் ஒத்திக்கொண்டான். அச்சமயம் வியாஸராஜருக்கு ஏராளமான பொருள்களை சம்பாவனை செய்தான். பலகிராமங்களையும் மானியம் விட்டான். சக்ரவர்த்திக்கு வியாஸராஜரிடம் ஏற்பட்ட மதிப்புக்கு அளவில்லை. அவைகளையெல்லாம் பெற்று வியாஸராஜர் ஏராளமாய் பண்டிதர்களுக்கெல்லாம் சம்பாவனை செய்தார். அநேக தர்மஸ்தாபனங்களுக்கு ஏராளமான சொத்துக்களையும் கொடுத்தார்.

## ஹனுமார்களின் ப்ரதிஷ்டை.

இவ்வாறு வியாஸராஜரின் அபாரமான கீர்த்தி எங்கும் பிரகாசித்திருந்தது. சக்ரவர்த்தியும் வியாஸராஜரிடம் விசேஷமான நட்பைக் காட்டிவந்தான். வியாஸராஜருடன் அவருடைய மடாலயத்திலேயே தாராளமாய் வசித்துவந்தான். மகாயோகீசுவரரான வியாஸராஜர் சக்ரவர்த்தியின் ராஜ்யம் செழித்தோங்கவும் பிரஜைகள் ஸுலபமாய் அவரவர்களின் கஷ்டங்கள் தொலைந்து ஸமஸ்த அபீஷ்டங்களைப்பெறவும்



நரச சக்ரவர்த்தியின் விசாலமான ராஜ்யத்தில் ஆங்காங்கு ஹனுமாரின் விக்ரஹங்களை ப்ரதிஷ்டை செய்தார். அந்த விக்ரஹங்கள் இவருடைய தபோ மகிமையால் பிரதிஷ்டை அடையப்பெற்றதால் இன்றைக்குமே மகாமகிமைகளைப் பொருந்தியதாயிருக்கின்றன. ஸ்ரீஆஞ்ஜனேயரின் சன்னிதானத்தை விசேஷமாய் பெற்றிருக்கின்றன. ஹம்பியிலிருந்துவரும் யந்திரோத்தார ஹனுமார்தான் இவ்வாறு ப்ரதிஷ்டை அடைந்தவைகளில் முதலாவதென்று சொல்லப்படுகிறது, இந்நகரிலேயும் ஸ்ரீவியாஸராஜரால் பிரதிஷ்டையடைந்த ஹனுமார் பக்தர்களின் ஸர்வாபீஷ்டங்களை அளித்துக்கொண்டு விளங்கி வருகிறார். அவருடைய சித்திரப்படம்தான் இம்மாத்வமித்திரனுடைய தனி உரிமைபெற்ற அடையாளமாய் ஆரம்பகாலத்தில் இதன் பக்கங்களில் பிரகாசித்திருக்கிறது. இவ்வாறு அநேக நகரங்களில் வியாஸராஜரால் பிரதிஷ்டைப்பெற்ற ஆஞ்ஜனேய விக்ரஹங்கள் ஜாதிமதபேதமின்றி எல்லோராலும் உபாஸிக்கப்பட்டு லோகக்ஷேமத்தை அளித்துவருகின்றன. இவ்வாறு வியாஸராஜர் இந்நாட்டில் 732 ஹனுமார்களை ஸ்தாபித்திருப்பதாய் தெரியவருகிறது. விஜயநகரத்தில் யோகவரதநரஸிம்ஹரை ஸ்தாபித்திருப்பதாயும் சொல்லப்படுகிறது.

## ரத்னாபிஷேகம் பெற்றது.

நரச சக்ரவர்த்திதனது மகனான வீரநரஸிம்ஹனிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்துவிட்டு விண்ணுலகம் சென்றான். வீரநரஸிம்ஹனுத் அவனுடைய பெயருக்கேற்ப மகாசௌரியம் படைத்தவன். பல சத்ருக்களை முறியடித்து ஜயம்பெற்றவன். தந்தையைப்போலவே வியாஸராஜரிடம் மிகுந்த பக்தியைக்காட்டிவந்தான். அவரிடமிருந்து அடிக்கடி உபதேசம் பெற்றுவந்தான். ஸ்ரீமத்வமத ஸ்தாபனத்திற்காக ஸ்ரீவியாஸராஜர் தாத்பரிய சந்திரிகை, நியாயாமிருதம், தர்க்கதாண்டவம், பேதோஜ்ஜீவனம், மந்தாரமஞ்ஜரி என்னும் கண்டனத்ரயங்களின் டிப்பணிகள் முதலிய நூல்களை இயற்றினார். அவைகளை சுயமே பாடம் சொல்லி ஸ்ரீமத்வமதத்தை ப்ரவசனம் செய்தார். வேற்றரசர்கள் வியாஸராஜருக்கு பல மரியாதைகளையும் உபாயனங்களையும் அனுப்பி வந்தனர். வீரநரஸிம்ஹனின் காலமும் முடிந்தது. பிறகு வீரநரஸிம்ஹனின் சகோதரன் கிருஷ்ணதேவராயனென்னும் ராஜசிரேஷ்டன் சக்ரவர்த்தி பதவியை அடைந்தான். கிருஷ்ணதேவராயன் மகா தர்மாத்மா. பெரிய வீரன். நரச சக்ரவர்த்தியைப்போலவே ஸ்ரீவியாஸராஜரிடம் அத்யந்தம் பக்தியைக்கொண்டவன். வியாஸராஜரை தம் குலதெய்வமாகவே வைத்து அடிபணிந்திருந்தான். கலிங்கபூபதி வெகு

நாள் தயாரித்திருந்த ஓர் அத்வைத கிரந்தத்தை வியாஸராஜரின் விமரிசைக்காகவென்று கிருஷ்ணதேவராயனிடம் அனுப்ப கிருஷ்ணதேவராயன் அதை எடுத்துக்கொண்டு வியாஸராயருடைய வசதிக்குவந்து சாவகாசத்தில் அதை கண்டித்து ஆக்ஷேபணைகளை எழுதித்தரவேண்டுமென்று கேட்க அந்த கிரந்தத்தைக்காட்டிய க்ஷணமே அதன்மீதுள்ள பல தோஷங்களை எடுத்துச்சொல்லி அவைகளை எழுதிக்கொடுத்து கலிங்காராஜனுக்கு அனுப்பும்படிச்சொன்னார். வியாஸராஜரின் மகா பாண்டித்யத்தைக்கண்டு பரமானந்தமடைந்து தன்னால் கூடுமானவரையிலும் வியாஸராஜருக்கு எல்லா மரியாதைகளையும் செய்துவிட நிச்சயித்தான். மறுநாளே வியாஸராஜரை சதுரங்கசைனியங்களுடன் ஊர்வலம்விட்டு அரண்மனையில் பெரியதொரு சபையைக்கூட்டி ஸ்வர்ணமயமான பீடத்தில் அமரச்செய்து பலவகை வாத்யங்கள் முழங்க, அந்தணர்கள் வேதகோஷங்கள் கோஷிக்க, பக்தர்கள் ஜயஜயவென்று உரக்கத் துதிக்க, ஹரிதாஸர்கள் நமோ நம: என்று பதங்களைப்பாட, கவிஞர்கள் கவிபாட, கிருஷ்ணதேவராயன் கண்களைப்பறிக்கும் பலவகை ரத்னராசிகள் நிறைந்த ஸுவர்ணகும்பத்தை எடுத்து ஸ்ரீவியாஸராஜருக்கு ரத்னாபிஷேகம் செய்து ஸாஸ்டாங்கம் நமஸ்கரித்தான். வியாஸராஜர் அவருடைய பக்தியைக்கண்டு பரமாநுக்ரஹம்செய்தார். அந்த ரத்னங்களை ராசியாய்க்குவித்து பிராம்மணர்களுக்கும் பண்டிதர்களுக்கும் வாரிக்கொடுத்தபின் வேற்றரசர்களுக்கும், சேனாநாயக்கர்களுக்கும், போர்வீரர்களுக்கும் அமூல்யமான ரத்னங்களைத்தந்தார். வியாஸராஜரின் ஔதார்யத்தை மெச்சாதார் யாருமில்லை. அச்சமயம் வியாஸராஜர் பரமவிருத்தர். மூக்குக்கண்ணாடியை தரித்திருந்ததாய் சொல்லப்படுகிறது. சுமார் 75 வயதிருக்கும். வியாஸராஜருக்கு கிருஷ்ணதேவராயன் வியாஸஸமுத்ரமென்னும் கிராமத்தைத்தந்தான். அங்கு வியாஸராஜர் வியாஸசமுத்திரமென்னும் பெரியதொரு குளத்தையும் வெட்டிவைத்தார்.

## குருபக்தியின் பெருமை.

வியாஸராஜர் சாபானுக்ரஹ சக்தியைப்படைத்திருந்தார். அவரிடம் உபதேசம்பெற எண்ணி தினம் ஒருவன் அவரை ஸேவித்து வந்தான். அவன் ஒன்றையுமறியாத முழுமூடன். அந்த மூடன் தனக்கு உபதேசம் செய்ய வியாஸராஜரை நிர்பந்திக்கவும் வியாஸராஜர் சிரித்து கோணா என்றார். கோணாவென்றால் கன்னடத்தில் எருமையே என்று அர்த்தம். எருமையே உனக்கு என்ன உபதேசம் செய்வது என்று பொருள்படும்படி வியாஸராஜர் சொன்னதை அறியாது அந்த மூடன் வியாஸராஜர் தனக்கு கோணா என்று உபதேசம் செய்ததாய் எண்ணினான். குருவிடமுள்ள பரம பக்தியால் மனதில் வேறு எந்த எண்ணத்தையும் கொள்ளாமல் ஆகாரமில்லாமல் ஏகாக்ரசித்தனாய் கோணா கோணா கோணாவென்று உச்சரித்துக்கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தான்.

(தொடரும்.)



# ஸ்ரீஜகந்நாததாசர் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

ஸ்ரீஜகந்நாததாஸரும் ஸ்நானம்செய்துவந்து தமது ஆன்ஹிகங்களை முடித்துக்கொண்டு ஆனந்தமாய்அங்கு அன்று பூஜையை முடித்து இரவு முழுமையும் ஸ்ரீஹரிபஜனையை நடத்திவந்தார். மிகுந்த ப்ரக்யாதரான ஸ்ரீஜகந்நாததாஸர் விஜயம் செய்து பஜனையும் செய்யும்செய்தி அவ்வூரில் எல்லோருக்குமெட்டியதாயினும் ஓர் வ்யபிசாரியின் விடுதியில் தங்கி இவ்வாறு செய்கிறாரே என்று ஜனங்கள் அறுவெறுப்புக்கொண்டு ஒருவராவது அவரிடம் வரவில்லை. ஸ்ரீஜகந்நாததாஸர் ஜனங்கள் வருகிறார்களா இல்லையா என்பதை கவனிப்பவரா என்ன? ஸர்வசக்தரான ஸ்ரீஹரியை ஸந்தோஷிக்கச்செய்வதே முக்ய நோக்கங்கொண்ட ஸ்ரீஜகந்நாததாஸர் ஆனந்தமாய்ப்பாடிக்கொண்டு இரவு நேரத்தைக்கழித்து பஞ்சபஞ்ச உஷ: காலத்தில் ஸ்நானம் செய்து ஸ்வாமி பூஜையைமுடித்து அந்த அம்பாள் தயாரித்த போஜனத்தை உட்கொண்டார். அன்றும் அவரிடம் ஒருவராவது வரவில்லை. அன்று மாலை திவான் பூரணய்யாவைப் பார்க்க அவருடைய கிருகத்திற்கு ஸ்ரீஜகந்நாததாஸரே நேரில் சென்றார். ஸ்ரீஜகந்நாததாஸர் முதல்நாள் அவ்வூருக்கு வந்ததும் வியபிசாரியின் வீட்டில் தங்கி பஜனை முதலியவைகளை நடத்தி பாரணை செய்திருப்பதும் திவான் பூரணய்யாவுக்கு தெரிந்து அவர் தாஸர்வாளிடம் மிகவும் அறுவெறுப்புக்கொண்டு தாஸர்வாளைப்பார்க்கவும் இச்சைப்பட்டிருக்கவில்லை. தாமாகவே தாஸர்வாள் திவான் பூரணய்யாவைப் பார்க்க அவருடைய கிருகத்திற்குவந்து சேரவும் தாஸர்வாள் வந்ததைக்கேட்ட பூரணய்யா தாஸர்வாளுக்கு ஏதாவது சொற்ப திரவியத்தில் அதாவது 5 ரூபாயில் ஓர் கம்பளியை வாங்கிக்கொடுத்து தங்கவிடாமலனுப்பிவிட வேண்டுமென்று மனதில் நிச்சயித்து தாஸர்வாளை உள்ளே அழைத்து வரும்படி மனுஷ்யாளை ஆக்ஞையிட்டார். அச்சமயம் பூரணய்யா ஸ்ரீமத்வசாஸ்திரத்தை பாடம் வாசித்துக்கொண்டிருந்தார்.

அவருடைய குருவும் எதிரில் உட்கார்ந்துக்கொண்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீஜகந்நாததாஸர்வந்து சேரவும் இருவர்களும் தடபுடலாய் எழுந்து தாஸர்வாளை வணங்கி ஓர் ஆஸனத்தில் அமரச்செய்தார். குசலப்ரச்னம் செய்தாகி முடிந்தது. ஸ்ரீதாஸர்வாள் பாடம் நடக்கட்டுமே! எனக்காக ஏன் அது தடைபடவேண்டுவென்று சொல்ல அதற்கு அந்த ஆசாரியார் பாடம் தினம் நடக்கிறது. தங்களுடைய ஸமாகமம் அபூர்வம். தங்களுடன் சல்லாபம் முடியட்டுமென்றார். நம்முடைய ஸல்லாபம் சாஸ்திரசம்பந்தமானதுதான். பரவாயில்லை. பாடம் நடக்கவேண்டுமென்று சொல்ல பூரணய்யா பாடத்தில் ஓர் ஸந்தேகம் வந்து இன்றையபாடம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஸந்தேகத்தை நிவிருத்தி செய்துகொண்டு நாளை பாடம் நடக்கவேண்டியிருக்கிறதென்று அறிவிக்க ஸ்ரீஜகந்நாததாஸர் அந்த ஸந்தேகத்தை வெகு சுளுவாய் எல்லோர் மனதிற்படும்படி நிவிருத்தித்து மூலத்திற்கும் டீகாடிப்பணிகளுக்கும் ஒத்ததான சரியான அர்த்தத்தை வெகு பரிஷ்காரமாய் உபன்யாஸம் செய்தார். இதைக்கேட்டு பூரணய்யா மிகவும் சந்தோஷமடைந்து தாஸவாளின் அடிபணிந்து அமூல்யமான சாதராவை வரவழைத்து ஸன்மானம் கொடுக்கப்போனார். அபரோக்ஷ ஞானியான தாஸர்வாள் அச்சமயம் அதைப்பெற மறுத்து "பிரபுவே! நான் வருவதற்குமுன் மனதிற் எண்ணங்கொண்டபடி ஐந்து ரூபாய் மதிப்புள்ள கம்பளியைக்கொடுத்து என்னைத்தங்கவிடாது அனுப்பிவிடுமென்றார். தாம் எண்ணியதை அறிந்துகொண்ட மஹா பாகவதோத்தமரான ஸ்ரீஜகந்நாததாஸரின் யோகமஹிமையை அறிந்து நடுநடுங்கிப்போய் திவான் பூரணய்யா சாஷ்டாங்கம் நமஸ்காரம் செய்து தன்னுடைய அபசாரத்தை மன்னிக்கும்படி வெகுவாய் வேண்டி மறுநாள் தமமுடைய கிருகத்திற்கு போஜனம் செய்யவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீஜகந்நாததாஸர் போஜனத்திற்கு வருகிறாரே என்று திவான் பூரணய்யா பெரியதொரு விருந்து செய்தார். அதற்கு அந்நகரிலுள்ள எல்லா பிரமுகர்களையும் வரவழைத்திருந்தார். வியபிசாரியின் வீட்டில் தங்கி அவளிடம் போஜனம்செய்த இந்த ஹரிதாஸருடனா சாப்பிடுவதென்று ஒவ்வொருவரும் அருவெறுப்புகொண்டாராயினும் திவான் பூரணய்யாவின் அழைப்புக்கு உட்படாமலிருக்க முடியவில்லை. (தொடரும்).

# ஸ்ரீ மகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரெங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(பதின்மூன்றுவது அத்தியாயம்.)

(காபி ரைட்) முன் தொடர்ச்சி.

## பகாஸுரவதம்.

பிறகு கம்ஸனுடைய வேலையாளான வாத்து உருவத்துடனிருந்த பகாஸுரன் ஸமர்த்தனான கிருஷ்ணனிடம் வந்து சேர்ந்தான். ஸுப்ரமண்யனுடைய ப்ரஸாதத்தால் காப்பற்றப்பட்டிருந்த பகாஸுரன் ஓடிவந்து கிருஷ்ணனை விழுங்கி விட்டான். பிறகு கிருஷ்ணன் அவனுடைய வயற்றுக்குள்ளிருந்து நெருப்பைப்போல் அதிகமாக சுடவும் அவன் கிருஷ்ணனை உடனே வெளியே கக்கினான். அவன் மூக்குநுணியால் கிருஷ்ணனைக்கொல்ல ஓடிவரவும் அதைக்கண்டு பகவான் அவனுடைய மூக்கை பிடித்துக்கொண்டார். யதுவம்சசிரேஷ்டனான கிருஷ்ணன் தளிர் போன்ற தன் இருகைகளால் அவனுடைய இரு மூக்குகளையும் பிடித்துக்கொண்டு பக்ஷியின் உருவங்கொண்டிருந்த பகாஸுரனை கிழித்தெரிந்தார். பிரம்மாதிகள் புஷ்பவர்ஷம் செய்து துதித்த பின் பலராமனுடன் கிருஷ்ணன் மாலையில் பிருந்தாவனம் வந்து சேர்ந்தார்.

## காளியமர்த்தனம்.

இவ்வாறு ப்ரம்மாதிகளால் நமஸ்காரம் செய்யப்பட்ட பாதபத்மங்களுள்ள பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கோபாலகர்களிடம் ஸதா விளையாடிக்கொண்டு ஆறுவது ஆண்டை அடையப்பெற்று ஸகல ஜகத் பாலகனாயிருப்பினும், பசுக்களுக்கு பாலகனாப் பிருந்தாவன மத்தியிலிருந்த அடர்ந்த கொடிகள் படர்ந்ததான ப்ரதேசங்களில் இருந்துவந்தார். எண்ணமுடியாத ஸாமர்த்தியமுள்ள கிருஷ்ணன் ஒருசமயம் தமையனான பலராமனை வீட்டில் விட்டுவிட்டு பசுக்களை ரக்ஷிக்கும் கோபாலகர்கள் பசுக்கள் இவர்களின் சமூகத்

துடன் கூடி யமுனாநதியின் கரையில் விளையாடியிருந்தார். கோபாலகர்களுக்கு பின்னாடி துக்கம் ஏற்படப்போகிறதென்று அறிந்து அவர்களுக்கு ஸமாதானம் சொல்வதற்காகவென்று அவருடைய அண்ணாவான பலராமரை நந்தகோபாதிகளிடம் விட்டிருந்தார். சதுர்முகனின் வரத்தால் எல்லோராலும் கொல்லமுடியாதவனும் கருடனைத்தவிர இதரர்கள் தடுக்கமுடியாத விஷவீரியமுள்ளவனுமான காளியஸர்பன் அந்த யமுனாநதியின் மடுவிலிருப்பதையறிந்து அந்தக்காளியனுடைய விஷம்கலந்திருந்த யமுனைமடுவின் ஜலத்தை பானம் செய்து அதனால் பிராணனைவிட்ட பசுக்களையும் சிநேகிதர்களான கோபாலர்களையும் ஸம்ரக்ஷித்தார். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் கடாக்ஷமாகிய திவ்விய அமிர்தத்தால் அபிஷேகமடைந்த பசுக்களும் கோபாலகர்களும் சீக்கிறமே உயிர் பெற்றனர். பிறகு கிருஷ்ணன் உயர்ந்த கிளைகளுடனிருந்த கதம்ப மரத்திலேறி இடுப்பில் கச்சையை இருகக்கட்டி இருகைகளாலபாகுவைத் தட்டி மிகவும் உயர்ந்திருந்த அந்த மரத்திலிருந்து அந்த மடுவில் குதித்தார். புருஷோத்தமனான கிருஷ்ணன் குதித்தவேகத்தால் காளிய ஸர்ப்பம் அவனுடைய இருப்பிடத்திலிருந்து வெளிக்கிளம்பி, அவனுடைய விஷத்தால் ஜலமெல்லாம் பொங்கி, அந்த விஷ கஷாயத்தால் பயங்கரமான அலைகள் பயத்தை அளிப்பதாய் அந்த மடு நூறு தனுஸ்ஸு நீளம் நாற்புறத்திலும் வழிந்தோடியது. அநந்த பலமுள்ள கிருஷ்ணன் இவ்வாறு ஜலத்தை நூறு தனுஸ்ஸு உயர்த்திவிட்டது என்ன ஆச்சரியம்? [நாற்பத்தி எட்டு முழம் ஒரு தனுஸ்ஸு எனப்படும்.] அந்த மடுவைக் கலக்கிக்கொண்டிருந்த கிருஷ்ணனிடம் காளிய ஸர்பம் அவனைச்சேர்ந்த ஸர்பங்களுடன் வந்து கிருஷ்ணனைத் தீண்டினான். தன் சரீரத்தால் கிருஷ்ணனைச் சுற்றிக்கட்டினான். அந்த காளிய ஸர்பம் விவேகமில்லாதவனாயிருந்ததால் அஸனுடைய ஸ்வாமியை அவ்வாறு செய்தான். ஈசனான கிருஷ்ணன் பக்திமானான காளியனின் குற்றத்தைப் பொறுத்தான். அச்சமயம் நந்தகோபன் முதலிய எல்லா கோபாலகர்கள் பிருந்தாவனத்தில் அசுபசூசகமான உத்பாதங்கள் உண்டாவதைப்பார்த்து வருத்தமடைய, பலராமர் கிருஷ்ணனின் மாகாத்மியத்தைச்சொல்லியும்



பயந்து அவர்கள் அந்த மடுவுக்கு வந்து சேர்ந்தனர். கிருஷ்ணன் தன்னைச்சேர்ந்த அநேக ஜனங்களுக்கு ஏற்பட்ட சங்கடத்தைப் பார்த்து அவருடைய பக்தனாயிருப்பினும் காளிய ஸர்பத்தை மர்த்தனம் செய்தான். உயர்ந்திருந்த அவனுடைய படங்களின் மீது நின்று கிருஷ்ணன் தாண்டவம் புரிந்தான். பிரம்மாதி தேவர்கள் அச்சமயம் கிருஷ்ணன்மீது புஷ்பவர்ஷம் செய்து தோத்திரம் செய்தனர். கிருஷ்ணன் இவ்வாறு அவனை மர்த்தனம் செய்துவர அவன் மிகவும் சங்கடப்பட்டுப்போய் அதைத் தாளாமல் முகத்தினின்றும் ஏராளமாய் உதிரத்தைக்கக்கிக் கொண்டு பக்தவத்ஸலனான நாராயணனை மனதால் சரணமடைந்தான். கிருஷ்ணனுடைய அற்புதமான தாண்டவத்தால் வெண்குடைபோல் படர்ந்திருந்த அவனுடைய படங்களெல்லாம் நசுங்கிப்போய் மிகவம் அதிகமாக ரக்தத்தைக் கக்கிக்கொண்டு ஸர்பராஜனான காளியன் அத்யந்தம் மூர்ச்சையடைந்திருப்பதைக் கண்டு அந்த காளியனுடைய பத்னிமார்கள் ஸகலஜகத்துக்கும் ஆதி குருவும் ஈசுவரனுமான கிருஷ்ணனை கீழே விழுந்து நமஸ்காரம் செய்தனர். அந்த காளியனுடைய பத்னிமார்களாலும் கானியனாலும் துதிக்கப்பெற்ற கிருஷ்ணன் காளியனுக்கு இனி கருடனால் பயமிருக்காதென்று அபயப்ரதானம் செய்து அந்த யமுனையின் ஜலத்திலிருந்து அவனை விரட்டி தேவர்கள் சித்தர்கள் ஸாத்யர்கள் இவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட சரிதையுள்ளவனாய் யமுனை ஆற்றை விஷஸம்பந்தமில்லாத ஜலங்கொண்டதாய்ச்செய்தார். அரவிந்தம்போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் அபரிமிதமான சந்தோஷமடைந்த பலராமன் முதலிய கோபாலகர்களுடன் சேர்ந்து யமுனையின் கரைக்குவந்து அந்த கரையில் அன்றிரவு வாசம் செய்தார். அன்றிரவு அங்கு தங்கியிருக்கும்பொழுது கம்ஸனுடைய கிங்கரனான ஓர் அஸுரன் அதி உத்கிருஷ்டமான பலத்துடன் காட்டுத்தீயாகவந்து சேர கோகுலத்தை ஸம்ரக்ஷிக்கும்பொருட்டு அந்த காட்டுத் தீயை கிருஷ்ணன் ஆவென்று பானம் செய்துவிட்டார்.

## அஸுரர்களின் வதம்.

இவ்வாறு தேவர்களாலும் சரியே அஸுரர்களாலும் சரியே

எண்ணவும் முடியாததான திவ்ய சரிதைகளை கணக்கற்ற சக்தி படைத்த ஸ்ரீகிருஷ்ணன் கோகுலத்திலிருந்து காட்டிவருங்கால் உக்ரனென்ற ஓர் அஸுரன் விஷக்காற்று உள்ள ஓர் மரமாயிருந்து அவனால் பிருந்தாவனத்திலிருந்த பிராணிகளுக்கு விசேஷமாய் நாசமுண்டாயிற்று. அந்த விஷவிருக்ஷத்தின் கந்தத்தால் மனுஷ்யர்கள் பசுக்கள் முதலான எல்லா பிராணிகளும் பலவகை வியாதிகளால் பீடிக்கப்பட்டு பிராணனைவிட்டனர். ஜகத்தை அழித்துப்போட நிச்சய புத்திகொண்டிருந்த விருக்ஷரூபியான உக்ராஸுரன் சதுர்முகனின் வரத்தால் எவராலும் கொல்லமுடியாதவனாயிருந்தான். அந்த விஷவிருக்ஷத்தின் சிறந்த விஷத்தால் ஆதிசேஷனின் அம்சமான பலராமனும் குளிர்ஜுரத்தை அடையவும் கிருஷ்ணன் பலராமனை ஆலிங்கனம் செய்து அதனால் அவனுடைய உபாதியை சொஸ்தப்படுத்திவிட்டு, விருக்ஷரூபியான உக்ராஸுரனை அவனைப்போல் விஷவிருக்ஷங்களாய் அவனுடன் முளைத்திருந்த அவனுடைய ஆட்களுடன் சேர்த்து தன் பலத்தால் வேருடன் பெயர்த்துத் தள்ளினார். சதுர்முகனின் வரம்பெற்று மரணமில்லாதவர்களாய் கோரூபியாயிருந்த அஸுரர்களையும் கிருஷ்ணன் ஸம்ஹரித்தார். விஷவிருக்ஷங்களை கீழேதள்ளி அவைகளை கொளித்தினார். பலராமருடன் சேர்ந்து யமுனா ஜலத்தில் விளையாடி பத்மநாபனான ஸ்ரீகிருஷ்ணன் பிருந்தாவனத்தில் உபாதிகளில்லாமலே சீக்கிரம் செய்தார்.

விபுவான கிருஷ்ணன் ருத்திரனுடைய வரத்தால் எல்லோராலும் அடக்கமுடியாதவைகளாயும் மகாபலமுள்ளவைகளாயுமுள்ள தைத்யசிரேஷ்டர்களான ஏழு காளைகளை ஸம்ஹாரம் செய்து யசோதையின் தம்பியான கும்பகனென்ற கோபகனுடைய பெண்ணான நீலா என்பவளை கல்யாணம் செய்துகொண்டார். அந்த நீலாதேவி பூர்வஜன்மத்தில் பகவானைக்குறித்து நான் ஸ்ரீகிருஷ்ணனுக்கு முதலாவது ஸம்ஸாரமாகவேண்டும், ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸங்கமம் எல்லா ஸம்ஸாரங்களுக்கு முன்பே கிடைக்கவேண்டுமென்று தவம் செய்தாள். ஆதலால் கிருஷ்ணன் அந்த நீலாதேவியை ருக்மணி சத்யபாமை முதலானவர்களின் விவாகத்திற்கு முன்பு விவாஹம் செய்துகொண்டார். முன்பு உத்தமர்களான அப்ஸரஸ்ஸுகளாயிருந்து வந்த இந்த கோபிகள் கிருஷ்ணருக்கு உபநயனமாவதற்கு முன்பே கிருஷ்ணனுடைய தேகசம்பந்தம் ஏற்படவேண்டுமென்று தவம் செய்து வரத்தை அடையப்பெற்றிருந்தனர். ஆதலால் கிருஷ்ணன் பாலியத்தில் அந்த கோபிகளுடன் க்ரீடித்தார்.



கோகுலத்தில் நண்பர்களான கோபாலகர்கள் பலராமருடனிருந்த கிருஷ்ணனைப் பார்த்து பழுத்த இந்த பனை நொங்குகளை சாப்பிட எங்களுக்குத்தாருங்களென்று கேட்டுக்கொண்டனர். இவ்வாறு இவர்கள் கேட்கவும் பலராமருடன் கிருஷ்ணன், கழுதை உருவங்கொண்டிருந்த தேனுகாஸுரனின் பயத்தால் கோபாலகர்கள் போகமுடியாதிருந்த பனந்தோப்புக்குச் சென்றார். துஷ்ட தைத்யனான தேனுகாஸுரன் விக்னேசுவரரிடமிருந்து வரம்பெற்று திர்க்காயுஸ்ஸுள்ளவனும் உத்தமபலம் படைத்தவனும் கலகப்ரியனுமானான். மகாகர்விஷ்டனான தேனுகாஸுரன் அவனுடைய தோட்டத்தின் பனைமரங்களினின்றும் பழங்களை உதிர்த்துக்கொண்டிருந்த பலராமனைப்பார்த்து எதிர்த்து ஓடிவந்தான். இரண்டு பின் கால்களால் உதைக்கவேண்டுமென்று நினைத்திருந்த தேனுகாஸுரனின் இரண்டு பின் கால்களையும் பிடித்து இழுத்துக்கொண்டு பலராமர் பனைமரத்தின்மீது இவனை விட்டெறிந்து அந்த மரத்தின் நுனியை கத்தரித்தார். (தொடரும்.)

---

## குறிப்பு.

அடியிற்கண்டதை சென்ற 7-வது நம்பர் 200-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் தொடர்ந்து படிக்கவும்.

ஆகவே தாங்கள் எனக்கு மந்திரத்தை உபதேசிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு சொன்னதைக்கேட்ட பாண்டுராஜன் குந்தியைப்பார்த்து மாத்ரிக்கு மந்திரத்தை உபதேசம் செய்யென்று சொன்னார். இவ்வாறு சொன்ன தனது கணவனான பாண்டுராஜனைப்பார்த்து யதுவம்சத்திற் பிறந்தவளான குந்தி இவ்வாறு சொன்னாள். பதியே! தங்களுக்கு உப

காரம் செய்யும்பொருட்டு ஒரு தரம் புத்ரபலனுண்டாகும்படி மாத்ரிக்கு மந்திரோபதேசம் செய்கிறேனென்றாள். ஒருதரம் குழந்தையைப்பெற்றபின் அடுத்ததடவை இந்த மந்திரம் பலனைத் தராதென்று சொல்லி குந்தி புத்ரனைத்தரும் மந்திரத்தை மாத்ரிக்கு உபதேசித்தாள். மாத்ரீ அந்த மந்திரத்தை கிரஹித்துக்கொண்டு ஒரே தடவை இரண்டு புத்ரர்களைக்கொண்டவளாய் எப்படி ஆவேனென்று ஆலோசித்தாள். தேவர்களில் அசுவினீ தேவர்கள் எப்பவும் ஒருவருக்கொருவர் விட்டுப்பிரிவதில்லை. இவர்களுக்கு எப்பவும் தனிப்பெயருமில்லை. இவ்விருவர்களுக்குமே உஷை என்ற ஓர் பத்னிதான். ஆகையால் ஒரு தடவை மந்திர ஜபத்தாலேயே அசுவினீ தேவர்கள் இருவர்கள் வந்து சேருவார்கள். என்றிவ்வாறு ஆலோசித்து மாத்ரி அசுவினி தேவர்களை அழைத்தாள். அவர்களிருவரும் சீக்கிரம் அங்கு வந்து சேர்ந்தனர். அந்த அசுவினி தேவர்களால் மாத்ரீ தேவியிடம் அவர்களின் அம்சர்களான இரட்டைப்பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் பிரம்மாவிடமிருந்து முதலில் பிறந்த நாஸத்யனென்றவன் முதலில் நகுலனாய்ப்பிறந்தான். இரண்டாவதான தஸ்ரனென்பவன் ஸஹதேவனென்று பிறகு பிறந்தான். இந்த மந்திரம் மீண்டும் புத்ரபலனைத்தரும்படி குந்தியிடம் சிபார்சு செய்யவேண்டுமென்று மாத்ரீ பர்த்தாவை ப்ரார்த்தித்தாள். பாண்டுராஜன் குந்தியிடம் சிபார்சு செய்தார். அப்பொழுது குந்தி பர்த்தாவைப் பார்த்துச் சொன்னாள். இந்த மாத்ரீ கபடமுள்ளவள். என்னுடைய அனுமதியன்றி இரண்டு அசுவினீ தேவர்களை அழைத்திருக்கிறாள். ஆகையால் என் குழந்தைகளுக்கு இவள் தீங்கிழைப்பாளென்று பயந்திருக்கும் என்னை, ஹே ராஜன், மீண்டும் என் மந்திரம் பலனைத்தரும்படி செய்ய என்னை பிரேரிபிக்காதீர்கள். என்றிவ்வாறு குந்தி சொல்ல பாண்டுராஜன் பேசாமலிருந்துவிட்டான். பதினொன்று ருத்திரன்களை ஒரே தடவை மந்திரத்தால்மாத்ரீ அழைத்திருந்தால் பதினொன்று மக்கள் அவளுக்கு பிறந்திருப்பார்களே ஏன் அவ்வாறு அழைக்கவில்லை என்று சம்சயம் வந்தால் ஸ்ரீபகவத்பாதாளால்



சமாதானம் சொல்லப்படுகிறது. தேவர்களை அவரவர்களின் ருத்திரர்களை அழைக்கவில்லை.

அசாதாரணப் பெயரைக்கொண்டு அழைத்தால் அவர்கள் வந்து மக்களைத்தருகின்றனர். அசுவினிதேவர்களுக்கு விசேஷ நாமம் ஒன்றுதான். அந்தப்பெயரைச் சொல்லி ஒரு மந்திரத்தால் இருவர்களை மாத்ரீ அழைத்தாள். ஏகாதச ருத்திரர்களுக்கு விசேஷமான நாமம் ஒன்றுதானில்லை. விசேஷ நாமபேதமிருந்தால் மந்திரத்தை ஆவர்த்தி செய்யவேண்டும். ஆகையால் மாத்ரி ஏகாதச

வாயுபகவான் தர்மராஜன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் இவர்களில் பிரவேசம் செய்தார். அர்ஜுனனிடம் மற்ற மூவர்களைவிட விசேஷம் பிரவேசித்தார். தர்மராஜனிடம் ஸௌம்ய சொரூபத்துடனும், அர்ஜுனனிடம் வீரஸ்வரூபத்துடனும் ப்ரவேசித்தார். முக்யப்ராணர் மிகவும் மேலான ஸௌந்தர்யஸ்வரூபத்தைக் காட்டிக்கொண்டு நகுல ஸஹதேவர்களில் பிரவேசித்தார். ஸௌந்தரியம்மட்டில் அசாதாரணமான சுபாவங்கொண்ட நான்காவது குமாரன் வேண்டுமென்று பாண்டுராஜன் விரும்பினான். ஆதலால் தான் ஸஹதேவனைவிட அதிகமாய் சிருங்கார ரூபத்துடன் வாயுபகவான் நகுலனிடத்தில் பிரவேசித்தார். சரியான நீதியின் ரூபத்துடன் ஸஹதேவனிடம் பிரவேசித்தார். ஜகத்தின் அந்தர்யாமியான வாயுபகவான் ஸகல குணங்கள் பொருந்தி பீமசேனனென்று அவதாரம் செய்தார். நல்ல தளிர்போன்ற சரீரமுள்ள மிருதுவான புருஷனை ஸ்தூலதிருஷ்டி படைத்த ஜனங்கள் ரூபவானென்று சொல்லுகிறார்கள். ஆகவே பாண்டுராஜன் பீமார்ஜுனர்கள் நல்ல ரூபவான்களாய் பிறந்திருப்பினும் வஜ்ஜிராயுதத்தைவிட அதிக திருடமுள்ள சரீரங்கொண்டவர்களாய் இருந்ததின் நிமித்தம் இவர்களைத்தவிர்த்து ரூபவானாகிய மகனை பாண்டுராஜன் விரும்பினான். முப்பத்திரண்டு லக்ஷணங்களமைந்த பீமசேனரின் மேலான ரூபம் சூக்ஷ்மஞானிகளுக்கு மட்டில் மனோஹரமானது. பாண்டுராஜனின் இஷ்டப்படி வாயுபகவான் கோமலமான தளிர்போல் காந்தியுடையவராய் நகுலனிடம் பிரவேசித்தார். இவ்

வாறு நால்வர்களில் பிரவேசித்த நான்கு ரூபங்கள், பீமஸேனரின் சுயரூபமொன்று ஆக ஐந்து ரூபங்களுடன் வாயுபகவான் கிருஷ்ணாவதார காலத்தில் ஆவிர்பவித்தார், ஸ்ரீகிருஷ்ணரும் இந்த ஐந்து பாண்டவர்களும் இதற்கு முன் மன்வந்தரத்தில் இந்திரபட்டத்தை ஆண்டவர்கள். இதில் முதல் மன்வந்தரத்தில் இந்திரபட்டத்தை ஆண்ட யக்ஞநாமகரான பகவான் ஸ்ரீகிருஷ்ணனாய் அவதரித்தார். இரண்டாவது மன்வந்தரத்தில் இந்திரபட்டத்தை ஆண்ட ரோசனனென்ற வாயுபகவான் பீமசேனனென்று அவதரித்தார். மூன்றாவது மன்வந்தரத்தில் இந்திரபட்டத்தை ஆண்ட தர்மதேவனை யுதிஷ்டிரனாய்ப் பிறந்தார். நான்காவது ஐந்தாவது மன்வந்தரங்களில் இந்திரபட்டத்தை ஆண்ட நாஸத்யன் தஸ்ரன் என்ற அசுவினீ தேவர்கள் நகுலன் ஸஹதேவன் என்று பிறந்தனர். ஆறு, ஏழு இந்த மன்வந்தரங்களில் இந்திரபட்டம் ஆண்ட புரந்தரனென்னும் சசீதேவியின் பதி அர்ஜுனனாய்ப் பிறந்தான். ஆதலால்தான் ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவர்கள் இவர்களை பூர்வேந்திரர்களென மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சுயமாகவே ஸாமர்த்தியம் படைத்தவர்களான பாண்டவர்கள் ஜ்யேஷ்டகிரமத்தாலும் காலகிரமத்தாலும் க்ஷத்திரியர்களுக்கு அருகமான ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களை அடைந்து எல்லோரும் ஸர்வக்ஞர்களாகியும் ஸகல தர்மங்களைக்கொண்டவர்களாயும் ஸ்ரீஹரியிடம் பக்தர்களாயும் பகவானிடம் மனஸ்ஸம்பந்தம் பெற்றவர்களாயும் விருத்தியடைந்தனர். இந்த மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் வேதத்திற்கு ஸமானமென்று அறிவிக்க இந்த சுலோகத்தில் ரிக்வேதத்திலுள்ள "தே வர்த்தந்த ஸ்வதவஸோ மஹித்வனா" என்னும் பாதத்தை பகவத்பாதாள் அப்படியே சேர்ந்திருக்கிறார்.

ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத்பாதாளியற்றிய ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயத்தில் ஸ்ரீகிருஷ்ணாவதார சரிதையில் பாண்டவோத்பத்திகதனமென்னும் பன்னிரண்டாவது அத்யாயம் ஸம்பூர்ணம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

---



# விடைகள்.

## வாயுவின் விஷபானம்.

வாயு பகவான் முதலில் விஷபானம் செய்து மீர்ந்ததை பரமசிவனிடம் கொடுத்தாரென்பதற்கு ஆதாரம் ரிக்வேத ஸம்ஹிதை 8-7-24ல் ஸ்பஷ்டமாய்க் காணப்படுகிறது. வேதவசனமாவது: "வாயுரஸ்மா உபாமந்தத் பினஷ்டிஸ்ம குனன்னமா, கேசீவிஷஸ்ய பாத்ரேண யத்ருத்ரேணாபிபத்ஸஹ ||" (கேசி) ப்ரசஸ்தமான கேசமுள்ள வாயுபகவான் (யத்) எப்பொழுது (விஷஸ்ய) விஷத்தை (பாத்ரேண) பாத்திரத்தால் (ருத்ரேண ஸஹ) ருத்திரனோடு (அபிபத்) பானம் செய்தாரோ (ததா) அப்பொழுது (குனன்னமா) துஷ்டர்களை வணங்கச்செய்யும் (வாயு:) வாயுபகவான் (அஸ்மை) ருத்திரனுக்காக (உபாமந்தத்) விஷத்தைக் கையிலிட்டு கசக்கினார். (பினஷ்டிஸ்ம) விஷத்தின் வேகம் எப்படி இல்லாமற்போகுமோ அப்படித்தேய்த்துப் பொடியாக்கினார் என்று இதன் அர்த்தம். தந்தையுடன் மகன் வந்தான் என்பதில் மகனுக்கு அபிராதான்யம் எப்படியோ அப்படி ருத்திரனோடு வாயுபகவான் பானம் செய்தாரென்பதில் ருத்திரனுக்கு அபிராதான்ய மிருக்கிறதென்பதை ருத்ரேண என்று திருதியைகவசனம் அறிவிக்கிறது. அபிரதானே திருதியா. அஷ்டமஸ்கந்த பாகவதம் 7-வது அத்யாயத்தின் தாத்பரியத்தில் இதற்கு பிரம்மபுராணவசனமும் ஆதாரமுமிருப்பதாய் ஸ்ரீபகவத்பாதாளின் வர்க்யத்திலிருந்து தெரியவருகிறது.

அந்த வசனமாவது:— "ருத்ரஸ்ய யசஸோர்த்தாய ஸ்வயம் விஷ்ணுர்விஷம் விபு:/நஸம் ஜஹ்ரே ஸமர்த்தோபி வாயும் சோசே ப்ரசாந்தயே ||" அந்த விஷத்தின் வேகத்தை அடக்க விஷ்ணு ஸமர்த்தரானபோதிலும் ருத்திரனுக்கு கீர்த்தியைப் பிரசித்தப்படுத்தவும் வாயுபகவானின் ஸாமர்த்தியத்தை வெளியிடவும் சுயம் விஷத்தைப் பானம்செய்யாமல் உபேக்ஷை செய்து வாயுபகவானையும் அதை பானம் செய்யும்படி உத்தரவிட்டார்." வாயுபகவானும் அவ்விஷத்தின் முக்யமான பாகத்தை உண்டு கையி

விட்டுக் கசக்கி ஸாரமற்றதை ருத்ரனிடம் கொடுத்தார். அதை அவரும் பானம் செய்தாராதலால் விஷ்ணுக்கு மகாத்மியம் ஒன்றும் குறைந்ததாய் ஆகாது என்பது அதன் தாத்பரியம்.

காபே. ஹயக்ரீவ தீக்ஷிதர்.

[ஸ்ரீமத் பகவத்பாதாள் தங்கள் சீடர்களுக்கு எவ்வித சம்சயமுமேற்படாது சரியான நிர்ணயமுண்டாக வெகு தெளிவாய் எண்ணிறைந்த அபூர்வமான எங்களால் ஸுலபமாக அறியப்படமுடியாத ப்ரமேயங்களை ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் புங்கானுபுங்கமாய்ச்சொல்லி ராசி ராசியாய்க்குவித்திருக்கிறார். எந்த ப்ரகரணத்திலேயும் சரியே எந்த இதிகாசத்திலேயும் சரியே அபூர்வமான ஓர் விஷயத்தையாவது எடுத்துச் சொல்லாமல் விடார். இப்படி பாகவதத்தில் சொல்லப்படவில்லையே பாரதத்தில் சொல்லப்படவில்லையே, என்று தங்கள் சீடர்கள் சம்சயப்பட்டு சிரமப்படலாகாதென்று ஸர்வக்ஞாசாரியாளான ஸ்ரீபகவத்பாதாள் தாம் இம்மகாபாரத தாத்பரிய நிர்ணயத்தை தயாரிக்க எவ்வளவு பாடுபட்டாரென்பதையும், தமக்கு விஷயங்கள் எத்தனைவகையில் கிடைத்ததென்பதையும் வாய்விட்டு ஸ்பஷ்டமாய் ஒன்றுக்கிரண்டு தடவை நிர்ணயத்திலேயே கூறியுள்ளார். அவர் சொல்வதாவது:— "சுலோகங்களை கவனம் செய்து சில பாகங்களில் சேர்த்துவிடுகின்றனர். சிலபாகங்களில் ஏற்கனவேயிருந்த சுலோகங்களை எடுத்துவிடுகின்றனர். சில பாகங்களில் முன்னே இருந்த சுலோகங்களை பின்னேயும், பின்னடியுள்ள சுலோகங்களை முன்னேயும் சேர்த்து வித்யாசப்படுத்துகின்றனர். அறிவில்லாமல் சில பாகங்களிலிருந்தவைகளை வேறு பாடமாகப் படிக்கின்றனர். இவ்வாறு நூல்களையெல்லாம் பூராவாய் மறைத்துவிடாமலிருந்தாலும், இப்படி பலவாறு சீர்குலையச்செய்து ஒரே குழப்பமாய் செய்திருக்கின்றனர். பாரதமமட்டிலல்ல இதேமாதிரி அநேகமாய் எல்லா நூல்களுமே கெடுதலை அடைந்திருக்கின்றன. கெடுதலை அடையாதபாகம் நூறு லட்சத்தில் ஒன்றுகூட இல்லை. இப்படிப்புஸ்தகங்கள் சீர்குலைந்துபோய் தாறுமாறாகக்கிடக்கும்போது தேவர்களும் சுலபமாய் அறியமுடியாத அதன் அர்த்தத்தை நீங்கள் எப்படி அறியப்போகிறீர்கள். இவ்வாறு கலியில் கிரந்தங்கள் சீர்குலைந்திருப்பதைப்பார்த்து அவைகளின் அர்த்தத்தை சரியாய் நிர்ணயித்துக்கொடுக்க ஸ்ரீஹரியான வேதவியாஸர் என்னை பிரேரிபித்தார். அவருடைய அருளால் அதை அறிந்து சொல்லுகிறேன். அதுமட்டிலல்ல. அவருடைய அருளால் நான் இதர எல்லா சாஸ்திரங்களையும் அறிந்திருக்கிறேன். எல்லா



வேதார்த்தங்களையும் அறிந்திருக்கிறேன். இப்பரதகண்டம் முழுமையும் அடிக்கடி சஞ்சரித்து அந்தந்த ஊரிலுள்ள புதகங்களைப் பார்த்தேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாய் இருந்துவருகிறது. ஆயினும் ஸாக்ஷாத் நாராயணராய் ஜகத் ப்ரபுவான ஸ்ரீவியாஸபகவான் பாரதாதிகளில் எதைச் சொல்லியிருக்கிறாரோ எதை அவர் எனக்கு உபதேசம் செய்திருக்கிறாரோ அதன்படி அவர் கொடுத்த ஞானத்தைக்கொண்டு நான் சொல்லுகிறேன். பாரதார்த்தத்தை அனுசரித்து ஸகல சாஸ்திரங்களுடைய அர்த்தங்களைத்தான் சம்க்ஷேபமாய்ச் சொல்லுகிறேன்." என்று 2வது அத்யாயத்திலும் "நான் இந்த நிர்ணயத்தை ஓர் நூலை ஆதாரமாய்க்கொண்டு செய்தவனல்ல. எல்லாபுராணங்களென்ன பாஞ்சராத்ராகமம், மகாபாரதம், எல்லா வேதங்கள், மூலராமாயணம் இவைகளை எல்லாம் ஆதாரமாய்க்கொண்டு செய்திருக்கிறேன். ஓரிடத்திலுள்ள கதைக்கும் மற்றோரிடத்திலுள்ள அதே கதைக்குமே விரோதமிருப்பதால் அந்த விரோதத்தைப் பரிகாரம்செய்து இதுதான் சரிதத்வம் என்று நிர்ணயம் செய்திருக்கிறேன். என்னுடைய யுக்தியைக்கொண்டும் புத்தி பலத்தைக்கொண்டும் பகவான் ஸ்ரீவேதவியாஸரின் ப்ரஸாதத்தைக்கொண்டும் நான் இவ்வாறு நிர்ணயம் செய்திருக்கிறேன். ஒரு கல்பத்தில் ஓர் வகையாய் நடந்து அதை ஓர் புராணத்தில் சொல்லியிருக்கிறார். அநேக கல்பங்களில் எப்படி நடந்திருக்கிறதோ அதைத்தான் நான் இந்த நிர்ணயத்தில் அறிவித்திருக்கிறேன். ஆதலால் இந்த தாத்பரிய நிர்ணயம் ஓர் நூலை மட்டில் ஆசிரயித்தது அன்று. ஆகவே என் சிஷ்யர்கள் இந்த தாத்பரிய நிர்ணயத்தில் விரோதமிருப்பதாய் எண்ணலாகாது" என்று ஒன்பதாவது அத்யாயத்திலேயும் சொல்லியுள்ளார். இவ்வாறு ஸ்ரீ பகவத்பாதாள் ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்க நம்மவர்கள் தாத்பரிய நிர்ணயத்தில் சொல்லியுள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் ஆதாரம் கேட்கத்தொடங்கினால் கிஞ்சித்ஞர்களான ஏமது பண்டிதர்கள் தெரிந்தவரை ஏதாவது ஒன்றிரண்டுக்கு சொல்லிவிட்டு மௌனத்தையே சாதிக்கவேண்டிவரும்.

ப—ர்]

## சங்கராவதார அத்யற்புத லீலாரகசியங்கள்.

ஸ்ரீமத் பிருந்தாரண்ய க்ஷேத்ரமாகிய மதராஸ் திருவல்லிக்கேணி உத்ராதிமடத்தில் ஷெ மடத்திய மகாஸ்வாமிகளின் ஸந்நி

தானத்தில் வேதாந்த விமர்சினிசபையின் ஆதரவில் ஸ்ரீபுத்தஜயந்தி (20-10-31) யன்று தர்க்கவித்வான் பண்டித சிரோமணி ஸ்ரீமான் வீரசோழபுரம் கிருஷ்ணாசாரியரால் உபன்யாசம் செய்யப்பட்டு அவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சிறுபுஸ்தகத்தைப் பார்த்து வெகு ஆத்திரத்துடன் போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரி என்றவர் கிருதே ச ப்ரதிகர்த்தவ்யம் என்னும் நியாயத்தை சிரமேற்கொண்டு வெகு பிரயாசை எடுத்து அநேக க்ரந்தங்களை பரிசீலனைசெய்து கொண்டதாய் எண்ணி தன்தலைக்கே ஆபத்தாய் வந்து சேரும் ஆபாஸமான யுக்திகளை எல்லாம் திரட்டி முட்டாள்த்தனமாய் 19-11-31உ முதல் கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியாரின் ஆதீனத்தில் நடந்துவரும் ஆர்யதர்மப்பத்திரிகையில் பிரதிவாரமும் மத்வாவதார அற்புத லீலா ரகசியங்களென்று வெளியிட்டுவரும் ரீதி மிகவும் மெச்சத்தகுந்ததாயிருக்கிறது.

உலகில் ஓர் ஸ்திரீ மற்றொருவளைப்பார்த்து சிலகாரணங்களைச் சொல்லி நீ வியபிசாரி என்றால் அவள் உண்மையாய் யோக்மாய் இருந்தால் தன்மீது ஏற்பட்டிருக்கும் தோஷங்களுக்கு பரிகாரம் சொல்லி நான் வியபிசாரியல்லவென்று ரூபித்துவிடுவாள். அப்படிக்கில்லாது கிருதஸ்ய பிரதிகர்த்தவ்யம் என்ற நியாயத்தை இந்த சாஸ்திரியைப்போல் பின்பற்றியவளானால், நீ வியபிசாரி, உன் தாயார் விக்பிசாரி, உன் பாட்டி வியபிசாரி, உன் தங்கை வியபிசாரி, உன் மகள் வியபிசாரி என்பாள். இவ்வாறு இந்த சாஸ்திரியாரைப்போல் அஸம்பத்தப்பிரலாபம் செய்வது துஷ்டஸ்திரீகளின் ஸ்வபாவமென்பது முதலில் வாசகர்கள் கவனிக்க வேண்டியதாகும்.

இலக்ஷக்கணக்கான கிரந்தங்களுள்ள சங்கரபாஷ்யமே அமங்களமாய் மங்களாசரணம் செய்யப்படாததாயிருக்க, இந்த சாஸ்திரியார் எல்லோரும் நகைக்கக்கூடிய ரீதியில் மங்களாசரணம் முதலியவைகளைச் செய்வதுபோல் ஆர்பாடம் செய்ததைப்பார்த்துவிட்டு, ஸ்ரீமான் பண்டித சிரோமணி கிருஷ்ணாசாரியார் உபன்யாஸம் செய்ததை—சங்கராசாரியார் அக்ஞானத்தாலோ அல்லது பிறரை ஏமாற்றவேண்டுமென்ற புத்தியினாலோ பௌத்தமத சித்தாந்தத்தையே தம்முடைய வைதிக சித்தாந்தமாகச்சொல்லி மறு



படியும் இதைக்கண்டனம் செய்து அவர் முன்பின் விரோதமாய்ப் பேசுகிறவரென்று நிரூபித்ததை—அநேக பிரமாணங்களுடன் கண்டித்து, அத்வைத மதத்திற்கும், பௌத்தமதத்திற்கும் சம்பந்தமில்லை என்றும், சங்கராசாரியார் முன்பின் விரோதமாய் பேசுகிறவரல்லவென்றும் ஸ்தாபனம் செய்யப்போவதாய் நாங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்தோம்.

சாஸ்திரியார் இதுவரைக்கும் அம்மாதிரியான பிரமாணங்களைக்காட்டவில்லை. சரியான பதிலையும் அளிக்கவில்லை. சாஸ்திரியாரின் வண்டவாளம் வெளியாயிற்று. அவரல்ல அவருடைய ப்ரபிதாமஹர் வந்தாலும் இதை நிரூபிக்க முடியாதென நிச்சயம் ஏற்பட்டது. எமது பண்டித சிரோமணி ஆசாரியாரின் வார்த்தைகள் ஆணித்தரமானவைகளென்று ஊர்ஜிதப்பட்டது. இந்த சாஸ்திரியாரின் மனதிலும் இந்த ஈட்டி பாய்ந்து வேறுவழியின்றி வாய்க்குழறி அஸம்பத்த பிரலாபம் செய்தாவது அவர் மனச்சமாதானமடைகிறாரென அத்வைதிகளிலும் தெய்வீ ஸம்பத்துள்ள ஜனங்கள் நன்கு கண்டுகொண்டிருக்கின்றனர். ஆயினும் அதிலுள்ள அஸம்பத்தமான பிதற்றலையும் சாஸ்திரியாரின் ஆசாரியான சங்கராசாரியாரின் அத்யற்புத அவதாராதி சரித்திரங்களையும் ஸாத்விகர்களுக்காக இம்மித்திரன் வாயிலாய் அறிவிக்கிறேன்.

விசார சீலன்.

## ஸ்ரீவைஷ்ணவர்களின் தண்டா.

அநேக விஷ்ணுமூர்த்திகளையும் அநேக சிவமூர்த்திகளையும் கொண்டு த்ரி மதஸ்தர்களும் ஏராளமாய் நிறைந்திருக்கும் மகாபுண்ய க்ஷேத்திரமாகிய இந்நகரில் இப்பால் அய்யங்கார்களெனப்படும், ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்மவர்களுக்கு செய்துவரும் தொந்திரவு அதிகமாயிருந்து வருகிறது. தர்மகைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீமான் S. R. சுந்தரமய்யர் சுமார் ஒருலக்ஷம் ரூபாய் செலவு செய்து காவேரிநதியின் அநேக கட்டத்து படித்துறைகள் அர்த்த மண்டபங்கள் மகாமண்டபங்கள் சிறுதேவாலயங்கள் இவைகளை செவ்வனே கட்டிமுடித்தார். அவைகளில் மாத்வர்களுக்கு சேர்ந்தவைகள் அநேகமும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் அவரால் வெகு சோபிதமாய் கட்டப்பட்டிருக்கும் காசிக்கர் ராயர் வம்சத்துக்குச் சொந்தமான மண்டபத்தில் வழக்கப்படி ஸ்ரீசாரங்கபாணியை ஏளப்பண்ணும்போது அங்கு அய்யங்கார்களின் த்ரி

நாமம் போடப்படாமலிருப்பதால் பெருமாளை எளப்பண்ணலாகாதென பலர் கூட்டமாய் நின்று தடுத்தனர். அது பலிக்கவில்லை. சில நாள் கழித்து சில விஷமிகள் இரவில் திருட்டுத்தனமாய் மாத்வர்களின் மண்டபங்களில் த்ரி நாமம் போடும் ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் புராணப்படித்துறையில் கட்டப்பட்டிருக்கும் விக்னேசுவர தேவாலய மதிலின் மீதுள்ள நந்திகேசுவர பிம்பங்களை உடைத்தும் அநேக அட்ழியங்களைச்செய்தனர் இந்நகர் மாத்வர்கள் பாரதஸிம்ஹம் ஸ்ரீமவே. காபே ராமசந்திராசாரியாரின் அக்கிராஸனத்தின் கீழ் ஓர் மகாநாடுகூடி மாத்வர்களின் ஸ்தலங்களில் த்ரி மதஸ்தர்களுக்கும் பொதுவான ஸ்தலங்களிலும் இவ்வாறு ஓர் வகுப்பாரின் குறியைமட்டில் போட எத்தனிப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதென்றும் ஆதிகாலம் முதல் வழங்கிவருவதும் ப்ராசீன பிம்பங்களில் காணப்படுவதுமான திலகத்தை பிம்பங்களில் காணப்படுவதுமான திலகத்தை பிம்பங்களில் போடுவது குற்றமல்லவென்றும் அநேக தீர்மானங்களை செய்து அதிகாரிகளுக்கு அனுப்பினர். பின்பும் அவர்களின் தண்டா விட்டபாடில்லை. ஸ்ரீசாரங்கபாணி சைத்ரோத்ஸவத்தின் இரண்டாவது நாள் 13-4-32 உயன்று ஸ்ரீசாரங்கபாணி வீதி சுற்றிவந்ததும் பல்லக்குடன் ஸ்ரீசக்கரபாணிஸ்வாமி கோயிலுக்கு வந்து அவரை அழைத்துக்கொண்டு ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் மண்டபத்திற்கு எழுந்தருளி இரண்டு பெருமாள்களும் ஏகாஸனத்தில் ஸர்வாபரண பூஜிதர்களாய் நன்கு அலங்கரிக்கப்படவும் ஸ்ரீவைஷ்ணவ அர்ச்சகர்கள் ஒதுங்கிவிடவேண்டும். ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் பிருந்தாவனத்தின் பூஜகர் மடத்துஸ்வாமி பெட்டியை எதிரில் கொண்டுவந்துவைத்து தூபதீபம் காட்டி தந்திரஸார முறைப்படி நம்மவர்களில் செய்யும் பூஜாகிரமத்தை அனுசரித்து த்வாதசஸ்தோத்திரம் படனம் செய்து பஞ்சபக்ஷ பரமான்னங்களை நைவேத்தியம் செய்து மகா நீராஜனம் முதலியவைகளை முடித்துவிட்டபின் அர்ச்சகர்கள் பெருமாள்களை ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த நைவேத்ய அன்னத்தைக்கலந்து ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளுக்கு ஹஸ்தோதகமாகி பிராம்மண ஸந்தர்பணை பிறகு நடப்பது வழக்கம். இவ்வாறு விஜயீந்திரஸ்வாமிகளின் காலம் முதற்கொண்டு அதாவது சுமார் 400 வருஷகாலமாய் நாளதுவரையில் நடந்துவருகிறது. இவ்விரண்டு பெருமாள்களும் அநேக வருடங்கள் ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் பூஜையிலேயே இருந்து சத்ருக்களால் கொண்டுபோகப்படாமல் காப்பாற்றிக் கொடுக்கப்பட்டபடியால் ஸ்ரீவிஜயீந்திரருக்கு இரண்டு பெருமாள்களுக்கும் சுயம் நைவேத்ய ஸமர்ப்பணம் முதலிய மரியாதைகளை பண்டைகாலத்தினர் கொடுத்திருக்கின்றனர். அய்யங்கார்களிலுமே சுயமாசாரிய புருஷர்களெனப்படுகிறவர்களுக்குக்கூட இல்லாத இந்த மரியாதையை மாத்வர்களிடமிருந்து எந்த வகையிலாவது தப்புவிக்க உத்தேசித்து மழையென்று சாக்கிட்டு ஸ்ரீ சக்ரபாணியை ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமிகோயிலுக்கு வழக்கத்திற்கு விரோதமாய் அந்த கோயில் டிரஸ்டியின் உத்திரவன்னியில் கொண்டுபோய் இரு பெருமாள்களையும் அறையில்வைத்து பூட்டிவிட்டு மூலைக்கொரு



வராய் பதுங்கிவிட்டனர். அன்று ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிமடத்தில் பிராம்மண ஸந்தர்ப்பணைக்காக சுமார் 400 பேர்களுக்கு சமையலாயிருந்தபடியால் எல்லோரும் பட்டினியாகவே மாலை 7-மணிவரையில் கிடக்க நேரிட்டது. ஸ்ரீமான்களான மடத்தின் ஏஜண்டு ஸ்ரீனிவாசாரியார் பூஜகர் புருஷோத்தமாசாரியார் தேவஸ்தான கமிட்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீனிவாஸராவ் முதலியோர் அதிகமான ப்ரயாசை எடுத்துக்கொண்டு ஆங்காங்கு ஓடி அந்தந்த அதிகாரிகளை பிரேரிபித்து ஆட்களைக்கூட்டி மாலை 6-மணிக்கு இரண்டுபெருமாள்களும் மண்டபத்திற்கு வரும்படி செய்ய வழக்கப்படி பூஜகர் ஸ்ரீமான் புருஷோத்தமாசாரியாரால் நைவேத்ய ஸமர்ப்பணாதி எல்லா பாத்யதைகளும் செய்து நடத்தப்பட்டன. ஸ்ரீமான் காசிக்கர் ராயர் மண்டபத்திற்கு பெருமாள்களை எளப்பண்ணலாகாதென இவ்வருடமும் நூற்றுக்கணக்கான அய்யங்கார்கள் கையொப்பமிட்டு மகஜர் அனுப்பினர். ஆனால் கோயிலதிகாரிகள் அதை நிராகரித்து பெருமாளை எளப்பண்ணினர். இவ்வாறு இந்த அய்யங்கார்களின் தண்டா அதிகமிருப்பதை முற்றிலும் உணர்ந்த ஸப்கோர்ட்டார். ஸ்கீமில் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமிகோயில் டிரஸ்டிகளில் மாத்வர்களுக்கும் ஓர் ஸ்தானத்தைக் கொடுத்திருக்கின்றனர். தற்போது டிரஸ்டியாயிருந்துவரும், தர்மசிந்தனையும் சுயஜாதி மதாபிமானமும் அதிகமாய் படைத்திருக்கும் மாயவரம் அட்வொகேட் ஸ்ரீமான் T.R. ரகுநாதராயரவர்கள் மாத்வர்களிடன் சங்கடத்தை முற்றிலுமுணர்ந்து இவைகளையெல்லாம் தீரவிசாரித்து இதற்கு மூலகாரணமாயுள்ள கோயில் சிப்பந்திகளை விலக்கியோ அபராதம்போட்டோ சரியானபடி சிக்ஷிக்கவும் இனி இத்தகைய சங்கடம் எப்போதும் ஏற்படாதபடிக்குள்ள தகுந்த உத்தரவுகளை ரிகார்டு செய்யவும் நிஷ்பக்ஷபாதமாய் வெகு சிலாக்யமான முறையில் நடந்துவரும் அவருடைய சகாக்களான இதர டிரஸ்டிகளுடன் கலந்து தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று எமது கோரிக்கை. அப்படியே உத்தமகுணம் வாய்ந்தவர்களான ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமி கோவில் டிரஸ்டி ஸ்ரீமான் குருநாதபிள்ளையவர்களும், தேவஸ்தானம் கமிட்டி பிரசிடெண்டு K. R. M. சிங்காரம்செட்டியாரவர்களும் சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

---

## விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| 28—4—32 | குருவாரம் | சிரவண உப. விஷ்ணுபஞ்சக உப. உண்டு. |
| 1—5—32 | பானுவாரம் | ஏகாதசி. |
| 5—5—32 | குருவாரம் | அமாவாசை. விஷ்ணுப. உப. உண்டு. |
| 8—5—32 | பானுவாரம் | அக்ஷயத்ருதியா. |
| 16—5—32 | சோமவாரம் | ஏகாதசி. |
| 18—5—32 | புதவாரம் | நாரஸிம்மஜயந்தி. |
| 20—5—32 | சுக்ரவாரம் | பௌர்ணமி. விஷ்ணுபஞ்சக உப. உண்டு. வைசாகஸ்நானம் பூர்த்தி. |

## செய்தித்திரட்டு.

ஸ்ரீரங்கம் தெற்கு சித்திரைவீதி முலுபாகலு மடத்தில் ஸ்ரீஸ்வர்ண வர்ணதீர்த்த ஸ்வாமிகளின் பிருந்தாவன ஸன்னதியில் எழுந்தருளியிருக்கும் கும்பகோணம் ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள் தம்கையால் நிர்மாணம் செய்யப்பட்ட 104 பிம்பங்களிற் சேர்ந்த ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு மாகசுத்தசமி புதன்கிழமை மாலை 5-மணிக்கு பாஞ்சராத்ரோக்த விதிப்படி மாத்வ ஸம்பிரதாயத்தை அனுஸரித்து விவாக மஹோத்ஸவம் நடந்தப்பட்டதாயும் அச்சமயம் ஸ்ரீமான்களான டிஸ்டிரிக்ட் முன்சீப் D. S. ராஜாராவ் ஹயக்கிரீவராவ் S. S. வியாஸராவ் வாணிவிலாஸ் பிரஸ் பாலசுப்பிரமணியஅய்யர் முதலான பிரமுகர்கள் வந்திருந்து உற்சவத்தை நடத்திவைத்தன ரென்றும் மறுநாள் மத்வநவமி உற்சவமும் நடத்தப் பட்டதென்றும் இவைகளுக்கெல்லாம் கும்பகோணம் காபே ஹயக்ரீவதீக்ஷிதரின் பெருமுயற்ச்சியே காரணம் என்றும் அறிவிக்கப்கிறது.

கும்பகோணம் வியாஸராயர் அக்கிரகாரத்தில் வியாஸ விலாஸத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீஹரிதாஸபஜனை சபையின் ஆதரவில் சுமார் 10 மாதகாலமாய் பிரதி குருவாரமும் வழக்கப்படி மாத்வ ஸம்பிரதாய பஜனை நடந்துவருகிறதென்றும் 15–4–32 சுக்ரவாரம் ஸ்ரீராமநவமியன்று இரவில் ஸ்ரீமவே ஆத்யம் பாகவத ரங்கனதாசாரியார் மைசூர் மாத்வரால் தயாரிக்கப்பட்டிருக்கும் ஸுந்தரமான பெரிய கோதண்டராம சித்திரப்படத்திற்கு அலங்காரம் முதலியவை செய்து விசேஷமான பஜனை நடத்தி பானகம் முதலியவைகளை பக்தகோடிகளுக்களித்தனரென்றும் எல்லோரும் ஸ்ரீஹரி குருபக்தியில் ஈடுபடும்படி கர்ண சிரவியமாய் அர்த்த புஷ்டியுடன் எண்ணிறைந்த தாஸர் பதங்களை வெகு ஊக்கத்துடன் மணிக்கணக்காய் பாடி இந்நகரில் எங்குமே அபரோக்ஷ ஞானிகளான ஸ்ரீபுரந்தரதாஸர் ஜகந்நாததாஸர் முதலியவர்களின் பதங்களைக்கேட்பதும், சொல்லுவதும்தான் மகா புண்யமென்றும் தற்போதுள்ளவர்கள் கவனம் செய்யும் இதர ஆபாஸப்பாட்டுகளின் சப்தம் காதிற்படுவதுகூட மகா பாபமென்றும் எல்லோரும் நன்கு கண்டுகொள்ளும்படி தாஸர் பதங்களை பிரசாரம் செய்துவரும் ஸ்ரீமான் கிருஷ்ணராவ் தாஸரவர்களின் விடாமுயற்சி மிகவும் கொண்டாடத்தக்கதென்றும் நமது நிருபர் எழுதுகிறார்.

---

## ஓர் விக்ஞாபனம்

கீதா தத்வத்தின் 3-வது பாகமும், இன்னமும் முடியவில்லை. மாத்வமித்திரன் ஷீட் காலண்டரும் இன்னும் வேலை முடியவில்லை. வேலை முடிந்தவுடன் அவரவர்களுக்கு அனுப்பப்படுமாதலால் சந்தாதார நேயர்கள் தயவுசெய்து ஞாபகக் குறிப்புகளை அனுப்பாதிருக்கப் ப்ரார்த்திக்கிறேன்.


### மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வமதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை !!

### சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

### அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனதாசாரியார் ஆசிரியர்) 0—6—0

உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர், 0—4—0

சக்குபாய் ஷை. 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

### கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூப்பிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பர்களவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India)

# டீ. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின்விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள். |

சந்தனாதித்தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்

கேட்லாக்குக்கு எழுதுங்கள்



Printed at Sri Venkateswara Printing works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam